ISSN 1391-9504

Vijey විජය
# விஜய்
31.10.2012 - மலர் 09, இதழ் 35



# இலங்கையில் குளங்களைக் கட்டிய மன்னர்கள் ...

வாசகர் முகம்

விலை
ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாருதப்புரவீகவல்லி

05

தாமரபரணி என்னும் தம்பண்ண

ஆக்கம்: அரியாலையூர் சி.சிவதாசன்



மிகப் பலமான அலைகள் ஆக்ரோஷமாக எழுந்து கரையை மிக மோசமாகத் தாக்கின. இவற்றிடையே மிகுந்த சிரமத்தின் மத்தியில் தட்டுத் தடுமாறியபடி அந்த மரக்கலம் தரைதட்டியது. அந்த இடம் இலங்கைத் தீவின் தென் மேற்குக் கரையான தம்பண்ண ஆகும். தம்பண்ணவுக்கு தாமர பரணி என்ற பெயரும் உண்டு. மூன்று, நான்கு நாட்களாக ஆழ் கடலில் தத்தளித்த மரக்கலன்களில் ஒன்றுமட்டுமே இக்கரையை வந்தடைந்திருந்தது. மற்றவை எங்கு சென்றன என்பது அந்த மரக்கலத்தில் இருந்தவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. மிகுந்த ஆபத்துக்களின் மத்தியில் தரை தட்டிய அந்த மரக்கலத்தில் விஜயனும் அவன் கூட்டாளிகளும் அவன் சார்ந்த ஆண் உறவுகளுமே இருந்தனர். அவர்களுடன் இணைந்து பெண்களையும், குழந்தைகளையும் ஏற்றி வந்த மரக்கலன்கள் எங்கு சென்றனவோ? என்ற ஏக்கம் அவர்களை மிகவும் வாட்டியது. கரையை அடைந்த அவர்கள் அவ்விடத்தில் ஏதாவது மனித நடமாட்டம் உள்ளதா? என அவதானித்தனர். ஆனால், கண்ணுக்கெட்டிய தூரம்வரை எவரையும் அங்கு காணவில்லை. எனினும், அக்கரையில் சில மனித காலடித்தடங்கள் அவர்களின் கண்களில் பட்டன. அதிலிருந்து மனித நடமாட்டம் இப்பகுதியில் நிச்சயம் இருக்கவேண்டும் என்பதை விஜயனின் கூட்டத்தினர் உணர்ந்துகொண்டனர்.

இதேவேளை, அவர்களின் தரையிறக்கத்தை கடலோரம் உள்ள அடர்ந்த காட்டின் மறைவில் இருந்து ஒரு கூட்டம் அவதானித்துக்கொண்டிருந்தது. அவர்கள் வேறு யாருமல்ல இயக்க இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு ஒரு பெண் தலைமை தாங்கிக் கொண்டிருந்தாள். அவள் மகா சூனியக்காரி. நடுத்தர வயதுடைய. அவள் கூட்டத்தில் இருந்த ஒருவனைப் பார்த்து ''யார் அவர்கள்?'' என மிடுக்காக வினவினாள். அதனைக் கேட்ட அவன் அஞ்சி நடுங்கி ''என்னை மன்னியுங்கள் தேவி'' அவர்கள் யாரென்று தெரியவில்லை. எதற்காக இங்கு வந்துள்ளார்கள் என்பதும் புரியவில்லை'' என மிகுந்த அச்சத்துடன் பதில் கூறினான். தனது வினாவுக்கு உரிய பதில் கிடைக்காமையினால் மிகுந்த சீற்றமடைந்த அவள் அவனை முறைத்துப் பார்த்தபடியே ''எதற்கும் அவர்களால்



எமக்கு ஆபத்து வரலாம் அதனைத் தடுப்பதற்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். அனைவரும் மரங்களிலும், பற்றை மறைவுகளிலும்மறைந்திருந்து என்ன நடக்கிறது என்பதை அவதானியுங்கள்'' என அவள் ஆண்களைப்போலவே மிக மிடுக்காக கட்டளைகளை இட்டாள். கருமை நிறத்தைக் கொண்டவளாக இருந்தாலும் அழகுடையவளாக மிக மிடுக்காக காணப்பட்ட அவள் பெயர் தான் குவேனி.

****

காலடித்தடங்கள் காட்டின் ஊடே ஊடறுத்துச் சென்றன. விஜயன் ஒருவனை அழைத்து ''இக்காலடித் தடங்களின் பின் சென்று யாராவது இந்த அடர்ந்த காட்டில் இருக்கிறார்களா? என்பதை அறிந்து எம் நிலை பற்றிக் கூறி உதவி கேட்டு வா'' எனக் கட்டளையிட்டான். இந்த விஜயனின் மறுபெயர் சிங்கல; என்றும் கூறப்படுகிறது. அது அவனுக்கு அவன் தந்தை சிங்கபாகு இட்ட பெயராகும். விஜயனின் கட்டளைப்படி, ஒருவன் அங்கு காணப்பட்ட காலடித்தடங்களைத் தொடர்ந்து காட்டுக்குள் சென்றான். ஆனால், அவன் நீண்டநெடு நேரமாகியும் காட்டுக்குள்ளிருந்து மீளவில்லை. இதனால், பதற்றமடைந்த விஜயன் முன் சென்றவனைப் பார்த்து வரும்படி ஏனையவர்களையும் அங்கு காணப்பட்ட அந்த அடர்ந்த காட்டுக்குள் அனுப்பினான்.

தன்னந்தனியனாக நின்ற விஜயனின் சிந்தனைகள் சிறகடித்துப் பறந்தன. காட்டுக்குள் சென்றவர்கள் எதையாவது கண்டார்களா? அல்லது அவர்களுக்கு ஏதாவது நடந்ததா? என்பது பற்றியே அவனின் சிந்தனைகள் அமைந்தன. இத்தகைய மிக மர்மமான சூழ்நிலை அவனை சிறிது அச்சமடைய வைத்தது. அவன் லாலா நாட்டில் இருக்கும்போது, அந்நாட்டைச் சூழவுள்ள தீவுகளில் அசுர இனத்தவரும், கொடிய மிருகங்களும் வாழ்வதை அறிந்திருந்தான். இவ்வாறான அசுரர்களும், கொடிய மிருகங்களும் வாழும் தீவாக இதுவும் இருக்கலாம் என அவன் எண்ணினான். தான் வந்த மரக்கலத்துக்குச் சென்று அங்கிருந்த கூரிய வாள் ஒன்றினைத் தனது பாதுகாப்புக்காகக் கையில் எடுத்துக்கொண்டான். அப்போது அவனது உள்ளம் கொதிப்படைந்தது. தந்தையாராகிய சிங்கபாகு அவனுக்கு ஏற்படுத்திய துன்பச் செயலை எண்ணி வேதனைப்பட்டான். ''தந்தையைக் கொன்ற சிங்கபாகு இன்று தன் மகனான தன்னையும் துன்பத்துக்குள்ளாக்கிவிட்டதை எண்ணிச் சினமடைந்தான். இதனால், உணர்ச்சிவசப்பட்ட அவன் விழிகள் கொவ்வைப்பழம் போல் சிவந்தன. இத்தீவில் உள்ளவர்களை இணைத்து இங்கு ஒரு ராச்சியத்தை ஏற்படுத்தி 'லாலா' நாடு சென்று அங்கிருக்கும் தந்தை உட்பட, என் உறவுகள் அனைவரையும் பழிவாங்குவேன். எனத் தனக்குள் சபதம் எடுத்துக் கொண்டான். (தொடரும்)

---

விஜய் Bookvin கிழக்கு

## இணைந்து வழங்கும் கேள்வி-பதில்

# அறிவுத் தேடல்

**நீங்களும் இப்பகுதியில் உங்கள் கேள்விகளைக் கேட்கலாம். வாராவாரம் இரண்டு சிறந்த கேள்விகளுக்கு தலா ருபா 500 பெறுமதியான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.**

**அறை வெப்பநிலையிலிருக்கும் உலோகத்தை தொடும்போது, உணர்கின்ற குளிர்ச்சியை, அதே வெப்பநிலையிலுள்ள மரத்தைத் தொடும்போது உணர முடிவதில்லை. அது ஏன்?**

வெப்பநிலையானது, கூடிய இடத்திலிருந்து, குறைந்த இடத்திற்கே எப்போதும் பாயும். அறை வெப்பநிலை அநேகமாக ஒருவரது உடல் வெப்பநிலையை விடக் குறைந்த வெப்பநிலையிலேயே இருக்கும். ஆகவே, அறை வெப்பநிலையிலுள்ள ஒரு பொருளை நீங்கள் தொடும்போது, உங்களிலிருந்து வெப்பம் அந்தப் பொருளுக்குப் பாய்கின்றது. இதனால், நீங்கள் வெப்பத்தை இழப்பதால், குளிர்ச்சியை உணர்கிறீர்கள்.



ஆனால், வெப்பம் இழக்கப்படும் (பாயும்) வீதம், எவ்வளவு நேரத்தில் கடத்தப்படுகிறது என்பது பொருளுக்குப் பொருள் மாறுபடும். உலோகங்களில் உடனே அதாவது, குறைந்த நேரத்தில் வெப்பம் பாயும்; ஆனால், மரத்தில் மிகுந்த நேரம் எடுக்கும். இவை இரண்டுமே உங்களிடமிருந்து வெப்பத்தைப் பெறுகின்றன. ஆனால், உலோகம் விரைவாக வெப்பத்தைப் பெறுகின்றதால், இதற்கு வெப்பக்கடத்தாறு (K) என்று பெயர்.

*எஸ்.எம்.நஃப்ரிஸ், கல்முனை*

****

**'நெனோ ரொபோக்கள்' என்றால் என்ன?**

உடலுக்குள்ளே ஒரு வைத்தியர் சென்று, நோய்களைக் குணப்படுத்த முடிந்தால் எப்படி இருக்கும்? எனும் சிந்தனையின் விளைவாக உருவானதுதான் இந்த 'நெனோ ரொபோ சிந்தனை'. Nano



என்பது ஒரு அளவு; 10-9 மீற்றரைக் குறிக்கும். அதாவது, ஒரு மில்லி மீற்றரை ஒரு லட்சம் பகுதிகளாகப் பிரித்தால்-அதில் ஒரு பங்காகும். ஆனால், பொதுவாக அளவில் சிறியவற்றை 'நெனோ' என்று அழைப்பது வழக்கமாகிவிட்டது.



அளவில் மிகச்சிறிய ரொபோக்களை உருவாக்கி அவற்றின் மூலம் உடலில் உள்ள நோய்களை முக்கியமாக புற்றுநோய் (Cancer) கலங்களை அழிப்பதுதான் இவற்றின் முக்கிய நோக்கம். ஏராளமான ஆங்கிலத் திரைப்படங்களிலும் இந்த 'உத்தி' காண்பிக்கப்பட்டிருக்கிறது. எனினும் தற்போதும் பரிசோதனை மட்டத்திலேயே இத்தொழில்நுட்பம் உள்ளது.

*ஆர்.குருபரன், மாத்தளை.*

**கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

அறிவுத் தேடல்,
'விஜய்'
த.பெ.இல: 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# கைத்தொலைபேசிகளை தேவைக்கேற்ப பயன்படுத்துங்கள்



இன்றைய காலத்தில் கைத்தொலைபேசிகள் அத்தியாவசியமான சாதனமாகிவிட்டன. அவசரமாகத் தொடர்புகொள்ள எமக்கு கைத்தொலைபேசிகளே உதவுகின்றன.

இக்கைத்தொலைபேசிகளால் நமக்கு நன்மைகள் ஏற்படும் அதேவேளை; ஊழல், மோசடி, கொலை, கொள்ளை போன்ற பல்வேறு தீய செயல்களுக்காக வேண்டி தவறான வழிகளிலும் பயன்படுத்தப்படுவதை ஊடகங்கள் வாயிலாக நாம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

எத்தகைய சாதனமாயினும் உரிய வகையில் அதனைக் கையாளும்போது, எவருக்கும் எவ்வித பாதிப்புகளும் ஏற்பட மாட்டா. அதனால், அனைவரினதும் நலன்களைக் கருத்திற்கொண்டு நாம் கைத்தொலைபேசிகளை இவ்வாறு பயன்படுத்துவோம்.

* அதிக வசதிகள்கொண்ட கைத்தொலைபேசிகள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இதனால், அதனைப் பாதுகாப்பதும் பெரும் சிரமத்திற்குரியதாகும். எனவே, உங்கள் தேவைக்கேற்ப வசதிகள்கொண்ட கைத்தொலைபேசியினைக் கொள்வனவு செய்யுங்கள்.




* உங்களின் மற்றும் நண்பர்களின் கைத்தொலைபேசி இலக்கங்களை அறிமுகமில்லாதவர்களுக்கு வழங்க வேண்டாம்.
* உங்களை அசௌகரியப்படுத்தும் தொலைபேசி அழைப்புகளையும் குறுஞ்செய்திகளையும் நிராகரித்துவிடுங்கள். உங்களை நிலைகுலையச் செய்யுமளவுக்கு தொலைபேசி அழைப்புகளோ அல்லது குறுஞ்செய்திகளோ எல்லைமீறி வரும்பட்சத்தில் அது குறித்து வயதில் மூத்தவர்களிடம் கூறி பொலிஸில் முறைப்பாடு செய்வது நல்லது.
* தவறான படங்கள், குறுஞ்செய்திகள் வந்தால் அவற்றைப் பிறருக்கு அனுப்பாதீர்கள். மற்றவர்கள் தொடர்பான இவ்வாறான செய்திகளையும் தகவல்களையும்கூடத் தவிர்த்திடுங்கள். அவற்றைப் பரப்புவது சட்டவிரோதமான செயலாகும்.இதுபற்றி நம்பிக்கைக்குரிய மூத்தவர்களுக்கு அறியப்படுத்துங்கள்.
* கைத்தொலைபேசியூடாக, நண்பர்களின் புகைப்படங்களை எடுப்பதற்கு முன்னர், அவர்களின் அனுமதியினைப் பெறுங்கள். அவற்றை மற்றவர்களுக்கு அனுப்புவதற்கு முன்னர் சிந்தித்துப் பாருங்கள்.
* உங்களது படங்கள் மற்றும் பிறரின் படங்கள் என்பனவற்றை கைத்தொலைபேசியில் வைத்திருப்பது குறித்தும் சிந்தியுங்கள். எதிர்பாராமல் உங்களது தொலைபேசி காணாமல் போனால், அந்தப் படங்கள் பிறரிடம் செல்லக்கூடும். மேலும், அந்தப் படங்களை மோசடி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பும் உள்ளது.
* கைத்தொலைபேசியினை எந்தக் காரணம் கொண்டும் பாடசாலைக்கு எடுத்துச் செல்லாதீர்கள்.
* உங்களுக்கு அறிமுகம் இல்லாத தொலைபேசி எண்களில் இருந்து அழைப்புகள் வந்தால், பதிலளிப்பதற்கு முன்னர் நன்கு சிந்தித்துப் பதிலளியுங்கள். அதேவேளை, நீங்கள் அறியாத எண்களில் இருந்து Missed Calls வந்திருப்பின், அது யார்? என்று அறிய முற்படாதீர்கள். அவ்வாறு அறிய முற்படும் வேளைகளில் நீங்கள் எதிர்பாராத வகையில் தீய விளைவுகளுக்குட்படலாம். அத்துடன், தேவையாக இருந்தால் அவர்கள் மீண்டும் உங்களைத் தொடர்புகொள்வார்கள் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.
* கைத்தொலைபேசியில் இருந்து வெளியேறும் மின்காந்த அலைகள் எமது மூளையில் பாதிப்பினை ஏற்படுத்துவதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். இது 20-25 வயதுக் கிடைப்பட்டவர்களையே அதிகம் தாக்குகின்றது. அதனால், நாம் கைத்தொலைபேசியூடான உரையாடல்களை இயலுமானவரை குறைத்துக்கொள்வதே சிறந்தது.



ஆக, நாம் அறியாத எத்தனையோ விடயங்கள் கைத்தொலைபேசியினால் நிகழ்கின்றன என்பதை ஒவ்வொருவரும் கருத்திற்கொண்டு அவற்றை உரியவகையில் பயன்படுத்துவது சிறந்தது. (இ)

வாசகர் முகம்
'விஜய்'
முன் அட்டையில்
இந்த வாரம்
இடம்பெற்றிருப்பவர்
ஷெலோமி ரொபர்ட்,
பழைய வீதி, பலாங்கொடை.



SMS ஊடாக இலகுவாக
சிங்களம் ஆங்கிலம்
கற்றுக்கொள்வோம்
இன்றே இணைந்து கொள்ளுங்கள்:
REG(இடைவெளி)YES என Type செய்து
DIALOG என்றால் 77000 க்கு
ETISALAT என்றால் 4499க்கு
SMS அனுப்புங்கள்
Monthly Rs. 30 + Tax
உங்கள் தொலைபேசியூடாக மும்மொழி ஆசிரியர் ஒருவர்
சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் தினந்தோறும் SMS மூலமாக 3 பாடங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் - 05

# விசித்திரக் குகைக்குள் தங்கச்சுவடி



## விசித்திரக் குகையை அடைந்த மனோகர்



அந்தக் காட்டுவாசி கூறியபடி மனோகர், விசித்திரக் குகையைத் தேடிப் புறப்பட்டுச் சென்றான். அந்த அடர்ந்த காட்டின் வழியே ஊடறுத்துச் சென்ற போது, மிகுந்த திகிலாக இருந்தது. தான் செல்லும் வழி சரியானது என்ற நம்பிக்கையும் மனோகருக்கு இருந்தது. தொடர்ந்து வெகுதூரம் நடந்து சென்றதால், மிகுந்த பசியும் களைப்பும் அவனை வாட்டியது. இதனால், அருகிலிருந்த சிறிய கற்பாறையொன்றின் அருகில் ஓய்வெடுக்கச் சென்றபோது, அங்கு கண்ட காட்சி அவனை வியக்க வைத்தது. அந்தக் கற்பாறையில் ஏதோ ஒரு செய்தி செதுக்கி எழுதப்பட்டிருந்தது.


இதைக்கண்ட மனோகர் ஆவலுடன் அதைப் படிக்க முயன்றான். அதில் தமிழ் எழுத்துடன் வேறு சில எழுத்துக்களும் கலந்து எழுதப்பட்டிருந்தது. அதை மனோகரால் வாசிக்க முடிந்த போது, அதில் 'குகை முன்னால், மூன்று மைல் தூரம்' என்று எழுதப்பட்டிருந்தது. சிந்தனையில் ஆழ்ந்தான் மனோகர். "இது அந்த விசித்திரக் குகையாகத் தான் இருக்கும். இக்குகை மிகப் பிரசித்தமானதொரு குகையாகத்தான் இருக்க வேண்டும். அதனால்தான் இவ்வாறு எழுத்துக்களை செதுக்கி உள்ளனர். அந்தக் குகைக்குள் சென்று ஏட்டை எவ்வாறு எடுப்பது?" என்ற சிந்தனைகள் தொடர தொடர்ந்து அப்பாதையிலேயே பயணித்தான் மனோகர்.

சிறிது தூரம் சென்றதும் தூரத்தில் இன்னுமொரு கற்பாறை இருப்பதைக் கண்டான். அதிலும் ஏதாவது எழுதியிருக்கிறதா? என்று பார்த்தான். அங்கு அதேபோன்று "குகை,முன்னால்" என்று மட்டும் எழுதப்பட்டிருந்தது. அந்த வழியால் மனோகர் தொடர்ந்து சென்றான்.

இவ்வாறு செல்கையில் மூன்றாவது கற்பாறையும் வந்தது. அங்கே ஒன்றும் எழுதப்பட்டிருக்காத போதும் ஓர் துளை இடப்பட்டிருந்தது. மனோகர் அத்துளையினுள்ளே பார்த்தான். உள்ளே ஏதோ ஒரு பொருள் இருப்பதைக் கண்டு அதைக் கையில் எடுத்துப் பார்த்தான். என்ன ஆச்சரியம், அது ஒரு பெரிய சாவி. பள பள என்று காட்சி அளித்தது. திகிலுடன் அதை எடுத்த மனோகர் எதுவும் புரியாது சுற்றுமுற்றும் பார்த்தான். வெகு தொலைவில் குகை ஒன்று இருந்தது, மகிழ்ச்சியுடன் ஓடிச் சென்று பார்த்தபோது அக்குகை வாயிலில் மர்மமான சிறிய கதவு ஒன்று தெரிந்தது.

(தொடரும்)

# ஒப்பிடாதே!



ஒரு ஊரில் ஒரு துறவி இருந்தார். அவரிடம் நல்ல துணி கூட இல்லை. இருந்த உடை கிழிசலாக இருந்தாலும் நேர்த்தியாக சுத்தமாக அதை அணிந்திருப்பார். அவரைப் பார்க்கவும், பேசவும், ஆசி பெறவும் பொதுமக்கள் அலை அலையாகத் திரண்டு சென்றனர்.

இதனை அந்நாட்டுத் தளபதி கேள்விப்பட்டான். இது அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. உடனடியாகச் சென்று அந்தச் சாமியாரைத் தண்டிக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

தனக்கு அப்படிப்பட்ட புகழ் வாய்க்காமல், கேவலம் ஒரு சன்னியாசிக்குப் புகழ் கிடைத்துள்ளதே' என்று பொறாமைப் பட்டான். இதனால் அவன் அன்றைய தினமே அந்தத் துறவியைக் காண்பதற்குச் சென்றான். "தளபதி வருகிறார்' என்றவுடன் துறவியைச் சுற்றி இருந்த கூட்டம் வழி விட்டு ஒதுங்கி நின்றது.

தளபதி துறவியை மேலிருந்து கீழ் வரை உற்று நோக்கி விட்டு பிச்சைக்காரனைப் போலத் தோற்றமளிக்கக் கூடிய, உன்னை ஒரு பொருட்டாக மதித்து, மரியாதை கொடுத்து மக்கள் கால்களில் விழுந்து வணங்கிச் செல்கிறார்களே அதுதான் ஏன், என்று எனக்குப் புரியவில்லை" என்றான்.

அவனுடைய பேச்சைக் கேட்ட துறவி, அவனை அழைத்து சென்று தனது குடிலின் பின்னாலிருந்த ஒரு பூந்தோட்டத்தைக் காட்டினார். அதில் வண்ண வண்ண மலர்கள் மலர்ந்திருந்தன. அப்போது அங்கே வானத்திலிருந்து ஒளிரும் நிலவைச் சுட்டிக்காட்டிய துறவி, "அது என்ன?" என்று கேட்டார்.

"அதுவா, அது நிலவு!" என்றான் தளபதி.

உடனே, துறவி தன் அருகே பூத்திருந்த ஒரு ரோஜா மலரைச் சுட்டிக்காட்டி "இது என்ன?" என்று கேட்டார்.தளபதி எரிச்சல் அடைந்தபடியே "இது ரோஜாப் பூ!" என்றான்.

"இந்த ரோஜாப்பூ என்றைக்காவது ஒருநாள் அந்த நிலவைப் பார்த்து, "ஆஹா இந்த நிலவு எத்தனை அழகு! இதைச் சுற்றி எவ்வளவு ஒளி வெள்ளம்! நான் அந்த நிலாவைப் போல அவ்வளவு வெண்மையாக இல்லையே என்று ஒப்பிட்டுப் பார்த்ததுண்டா இல்லை அல்லவா? அதேபோல அந்த நிலவு கீழே உள்ள இந்த ரோஜா மலரைப் பார்த்து, "நாம் இந்த மலரைப்போன்ற நிறத்தில் இல்லையே, மிருதுவாக இல்லையே என்று வருத்தப்பட்டதுண்டா?" இல்லையே. ரோஜாப் பூவின் அழகு ஒரு விதமானது. நிலவின் அழகு வேறு விதமானது!" என்றார்.

துறவி கூறியதைக் கேட்ட தளபதி தன் தவறை உணர்ந்தான். அவன் கண்கள் கலங்கின. "தங்களை மரியாதைக் குறைவாக நடத்தியதற்கு வருந்துகிறேன் என்று கூறியபடியே தளபதி அவரது கால்களில் விழுந்து வணங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி முகாமைத்துவம் - கல்வி முகாமைத்துவம் - கல்வி முகாமைத்துவம்

## நீண்டகால இலக்குகளை சிறிய இலக்குகளாக வகுத்துக்கொள்ளுங்கள்



ஒவ்வொரு மனிதரும் தமது வாழ்வில் பல்வேறுபட்ட இலக்குகளைக் கொண்டிருக்கின்றனர். இந்த இலக்குகள் அவரவர் தேவையின், விருப்பத்தின் அடிப்படையில் வித்தியாசப்படுகின்றன.

ஆக, எமது தேவையைப் பூர்த்தி செய்ய எம்மால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளை சரியான வகையில் முகாமைத்துவம் செய்து, அதனை அடைந்துகொள்வதற்கு ஒவ்வொருவருக்கும் இலக்கு அவசியமாகின்றது.

அதன் அடிப்படையிலேயே, கல்வி கற்கும் மாணவர்களும் தமக்கென உறுதியான இலக்குகளை வைத்துக்கொள்ள வேண்டும். அவை நீண்டகால இலக்குகளாகவோ அல்லது குறுகிய கால இலக்குகளாகவோ இருக்கலாம். நீண்டகால இலக்குகளை எடுத்துக் கொண்டால், அவ்வாறான இலக்கை அடைய தொடரான முயற்சியும் செயற்பாடும் நம்பிக்கையும் மிக மிக அவசியமாகின்றது.


மாணவர்கள் நீண்டகால இலக்குகளை அடைய உறுதியான நம்பிக்கையை கொண்டிருந்தாலும் கால ஓட்டத்தில் அந்த நம்பிக்கையை தளர விடுவதும் அதற்காக உழைப்பதும் குறைவடைந்து செல்கின்றது. அதற்கான காரணம்: இலக்குகளை அடைய நீண்ட காலம் எடுப்பதும் அதற்காகக் காத்திருக்கும் மனப்பான்மை இல்லாமையும் ஆகும்.

ஒவ்வொரு மாணவரும் நீண்டகால இலக்குகளை ஏற்படுத்திக் கொள்ளும்போது, அந்த இலக்குகளை சிறு சிறு இலக்குகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்ட சிறு சிறு இலக்குகளை ஒவ்வொன்றாகச் செயற்படுத்திக்கொண்டு வந்தால் நீண்டகால இலக்கை இலகுவாக அடைந்து கொள்ள முடியும்.

உதாரணமாக: உயர் கல்வி கற்க வேண்டும், பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் போன்ற நீண்டகால இலக்குகளை ஏற்படுத்திக் கொண்டால், ஒவ்வொரு தவணை, மாதமாக அவற்றைப் பிரித்து- சிறப்பாக கற்றுப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறான முயற்சிகள் நீண்டகால இலக்கை நோக்கி இலகுவாக நகர்த்தும்.

அதேபோன்று, இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு எடுக்க வேண்டும் என இலக்கு வைத்திருந்தால், அந்த இலக்கை மொத்தமாக அடைய நினைக்காமல், அதனை அடைய சிறிய சிறிய இலக்குகளாகப் பிரிக்க வேண்டும். அந்தவகையில், தவணைப் பரீட்சைகள், வீட்டில் கற்றுக்கொள்ளும் பாடங்கள், கடந்த கால வினாக்கள் என்ற வகையில் பிரித்து நோக்கிக் கற்க ஆரம்பித்தால், இலக்கை இலகுவாக அடையலாம்.




ஆகவே, நீண்டகால இலக்குகளை சிறு சிறு இலக்குகளாகப் பிரித்துக் கொள்வது சிறந்த கற்றலுக்கு ஏதுவாகும்.

-எம்.ஏ.எஃப். சப்ரானா

# விண்வெளித் தகவல்கள்

## பெரும்பகுதி வைரத்தினாலான கிரகம் கண்டுபிடிப்பு

பெரும்பகுதி வைரத்தினாலான கிரகம் ஒன்று வானியல் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிரகம் அளவில் பூமியைவிட இரண்டு மடங்கு பெரிதானதெனத் தெரிவிக்கப்படுகின்றது. '55 Cancri e' என்று பெயரிடப்பட்டுள்ள இக்கிரகத்தை பிரெஞ்ச்-அமெரிக்க ஆராய்ச்சிக் குழுவினர்களே கண்டுபிடித்துள்ளனர்.



55 Cancri e கிரகமானது, நமது சூரியனைப் போன்றதொரு நட்சத்திரமான 55 Cancri Aயினைச் சுற்றி வருகின்றது. இது பூமியிலிருந்து சுமார் 40 ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது. இந்தக் கிரகம் 2004 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 30 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டதோடு, 2010 ஆம் ஆண்டு வரை அது பற்றிய கண்காணிப்புகளும் மீள் மதிப்பீடுகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன.

அதற்கமைய, 55 Cancri e கிரகத்தின் மேற்பரப்பு காரீயம் மற்றும் வைரத்தினால் மூடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதனை அடுத்து, அது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வந்த வானியலாளர்களால் இவ்வருடம் (2012) ஒக்டோபர் மாதமளவில் இந்தக் கிரகம் 'கார்பன் கிரகம்' என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. 55 Cancri e கிரகம் அதன் நட்சத்திரத்தைச் சுற்றிவர 2.8 நாட்களை எடுக்கின்றது.

## ஞாயிற்றுத் தொகுதிக்கு மிக அண்மையில் ஒரு புறக்கோள்

### வானியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்





எமது ஞாயிற்றுத்தொகுதிக்கு சற்று அப்பால் நான்கு ஒளியாண்டுகள் தூரத்தில் உள்ள அல்பா செண்டாரி என்ற விண்மீன்களில் ஒன்றை சுற்றி வரும் புறக்கோள் ஒன்று வானியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எமது ஞாயிற்றுத் தொகுதிக்கு உட்பட்ட புதன்கோளானது நமது சூரியனைச் சுற்றி வரும் தூரத்துக்குக் குறைவான தூரத்தில் இருந்தவாறே, இந்தப் புறக்கோள் அதன் சூரியனைச் சுற்றி வருகின்றது. இதனால், இந்த புறக்கோள் 'உயிர்வாழ்வதற்கு ஏற்ற வலயத்துக்கு' வெளியே அமைந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

சூரியனுக்கு மிக அண்மையாக உள்ள விண்மீன் புரோக்சிமா செண்டாரி ஆகும். இது அல்ஃபா செண்டாரி ஏ மற்றும் பி ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்று விண்மீன் குழுக்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புறக்கோளானது, அல்ஃபா செண்டாரி பி விண்மீனுக்கு அண்மையில் காணப்படுகிறது.

தற்போது அறியப்பட்டிருக்கும் 840 புறக்கோள்களில் இதுவே பூமிக்கு அருகில் அமைந்துள்ளது. அத்துடன், இது பூமியைப் போன்ற எடையுடையது என்றும் வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இது தனது சூரியனை ஒரு தடவை சுற்றி வர 3.6 நாட்களை எடுக்கின்றது. இதற்கு 'அல்ஃபா செண்டாரி பிபி' (Alpha Centauri Bb) எனப் பெயரிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முற்காலத்தில் இலங்கையை சிறப்பாக ஆட்சி செய்த மன்னர்களில் பலர், நாட்டின் பொருளாதாரத்தையும் விவசாயத்தையும் முன்னேற்றியது போல் நீர்ப்பாசனத் துறையிலும் பெரும் அக்கறை செலுத்தி வந்துள்ளனர். நீர்ப்பாசனத்துறைக்கான இடங்களை தெரிவுசெய்வதிலும் அதனைக் கட்டியெழுப்புவதிலும் சிறந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, குளங்கள் பலவற்றை நிர்மாணித்தனர். அந்தவகையில், இலங்கையில் குளங்களைக் கட்டிய சில மன்னர்கள் பற்றிய விபரங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றோம்.*

# குளங்களைக் கட்டி
# மன்னர்கள் சிலர்....



## மன்னன் வசபன்
### (கி.பி. 61-105)



லம்பகர்ண அரச மரபின் முதல் மன்னனாக விளங்கிய வசபன், அநுராதபுர காலத்தில் ஆட்சிபுரிந்த முக்கியமான அரசர்களில் ஒருவராவார். 44 ஆண்டுகள் வரை நீடித்த அவரது ஆட்சியில் குளங்களையும் கால்வாய்களையும் கட்டுவதில் அவர் பெரும் சாதனை புரிந்ததாக கூறப்படுகின்றது. பதினொரு குளங்களும் பன்னிரெண்டு கால்வாய்களும் வசபன் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இவர் கட்டுவித்த குளங்களில் எருவாவியே மிகப் பெரியது. இதனைத் தவிர; மஹாவிலச்சிக்குளம், மணாங்கெட்டிய குளம், நொச்சிப்பொத்தானை குளம், ஹிரிவடுன்ன குளம், மயந்திகுளம், வங்குனகுளம், நிதுபத்பான குளம் என்பன ஏனைய முக்கிய குளங்களாகும்.

எலஹர கால்வாய் வசபன் மன்னனால் வெட்டப்பட்ட முக்கிய கால்வாய் ஆகும். இதைத் தவிர, ஆளிசாரக் கால்வாயும் இவரால் கட்டப்பட்டதாகும். வசபன் மன்னனே, இலங்கையில் மாபெரும் குளங்களைக் கட்டத் துணிந்த முதலாவது மன்னர் ஆவார்.

## மகாசேன மன்னன்
### (கி.பி. 272-299)



கோத்தாபய மன்னனின் மகனாகிய மகாசேனன், நாட்டை ஐக்கியப்படுத்துவதிலும் பொருளாதாரம், விவசாயம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதிலும் பெரும் பங்கு வகித்தார். இலங்கை வரலாற்றில் அதிக நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கிய மன்னன் இவரே என வரலாறு கூறுகிறது.

மகாசேன மன்னன் ஆயிரம் குளங்களையும் மிக நீளமான கால்வாய்களையும் கட்டியதாக வம்சக் கதைகள் கூறுகின்றன. மகாசேனனால் கட்டப்பட்ட மிகப்பெரிய குளம் மின்னேரியாக் குளமாகும். மகாவலிகங்கைக்கு குறுக்காக மின்னேரிய ஓயாவுக்கு அருகில் மின்னேரியாக்குளம் கட்டப்பட்டது. இதனால் பயனடைந்த விவசாயிகள் மகாசேனனை 'மின்னேரித் தெய்வம்' என வழிபட்டனர். ஹுருளுவாவி, மஹகணதராவ, மாமினியா குளம், மஹாரத்மலை குளம், கவுடுல்ல குளம், மஹகல் கடவள குளம், மாகல்ல குளம் என்பன மகாசேனனால் நிர்மாணிக்கப்பட்ட குளங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.



## தாதுசேன மன்னன்
### (கி.பி. 459-477)

அநுராதபுர ராசதானியில் ஆட்சி செய்த மன்னன் தாதுசேனன், விவசாயத்தை அபிவிருத்தி செய்வதிலும் நீர்ப்பாசனத்துறையைக் கட்டி எழுப்புவதிலும் அர்ப்பணிப்போடு செயல்பட்டார். வாய்மொழிக்கதைகள் மற்றும் இலக்கிய மூலாதாரங்களில் தாதுசேனன் 18 பெருங்குளங்களை கட்டுவித்ததாகக் கூறப்படுகின்றது. இவற்றில் கலாவாவி முக்கியமானதாகும். அத்துடன், மாத்துகம குளம், பாணன் குளம், யோதவாவி, மெத்தகுட்டிய குளம், மாஎளிய குளம் (மஹலுகுளம்) போன்ற குளங்கள் அவற்றில் சிலவாகும்.

## இரண்டாம் முகலன் மன்னன்
### (கி.பி. 546-566)



தாதோப்பபூதி எனும் மன்னனின் ஆட்சியைத் தொடர்ந்து அநுராதபுரத்தில் இரண்டாம் முகலன் ஆட்சிபீடம் ஏறினான். 'தலமுகலன்' என்றும் இம்மன்னனை அழைப்பர். இவர் நீர்ப்பாசனத்துறைக்கு பெரும் சேவை ஆற்றினார். பதவியாக்குளம் மற்றும் பத்பஹன் குளம் என்பன இம்மன்னனால் கட்டப்பட்ட இரு பாரிய குளங்களாகும். இதில் பத்பஹன் குளம் மிகப் பெரியது. தற்பொழுது இக்குளத்தை நாச்சியாதீவு குளம் (நாச்சதூவ குளம்) என அழைக்கின்றனர். நாச்சதூவ குளத்தைக் கட்டும்போது, மல்வத்து ஓயாவை மறித்து அதன் குறுக்கே அணைகட்டி ஜயகங்கையில் இருந்து வெட்டிய கால்வாய் வழியாக மேலதிக நீரை இக்குளத்திற்குப் பாய்ச்சியதாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முதலாம் அக்போ மன்னன்
### (கி.பி. 578-612)



அநுராதபுரத்தில் ஆட்சி செய்த முதலாம் அக்போ மன்னனும் இலங்கையின் நீர்ப்பாசனத்துறைக்கு மாபெரும் சேவையாற்றிய மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர். இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வரும் 'மணிமேகலா' அல்லது 'மினிப்பே அணை' இம்மன்னனின் மாபெரும் நிர்மாணமாகும். இவை தவிர, வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள சிரிவடனமானக குளம், முல்லைத்தீவு பிரதேசத்தில் அமைந்துள்ள தண்ணிமுறிப்புக்குளம் மற்றும் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள மாமவடுவ குளம் உட்பட, மேலும் பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் இம்மன்னன் அமைத்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 2012, ஒக்டோபர், 31, புதன்கிழமை V




# Windows® 8 உன்னத குணாதிசயங்கள்

மைக்ரோசொஃப்ட் இறுதியாக வெளியிட்ட Operating System ஆன Windows -7, பயனர்களிடையே (user) மிகவும் பிரசித்தி பெற்றுக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் கடந்த 26 ஆம் திகதியன்று (26.10.2012) உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட மைக்ரோசொஃப்டின் புத்தம் புதிய பணிசெயல்முறைமையான (Operating System) 'விண்டோஸ் 8' (Windows 8) இன் உன்னதமான குணாதிசயங்கள் பற்றி இங்கு நோக்குவோம்.

*** வேகம்:** புதிய பணிசெயல்முறைமையை கொண்டியங்கும் கணினியை, on செய்தவுடன், அது மிக வேகமாக இயங்கத் தொடங்கி விடும். ஆனால், முன்னைய Windows பதிப்புகள் செயற்படத் தொடங்க அதிக நேரம் எடுத்தது என்பது யாவரும் அறிந்ததே. ஆனால், Windows 8 ஆனது, அந்த முறையை மாற்றியமைக்கின்றது.

*** பயனர் இடைமுகம் (user interface):** முன்னைய Windows பதிப்புகளைப் போலல்லாது, புதிய Windows 8 ஆனது மிகவும் மாறுபட்ட, அதேவேளை மெருகேற்றப்பட்ட பயனர் இடைமுகத்தைக் கொண்டு காணப்படுகிறது. இந்தப் பயனர் இடைமுகமானது, Metro UI என வழங்கப்படுகிறது. இந்த இடைமுகத்திலிருந்து மிகவும் வேகமாகக் கருமமாற்ற முடிவதோடு, தொடுகைத் திறனில் இயங்கக்கூடிய சாதனங்களிலும், இதனை வெகுலாவகமாக இயக்கிக் கருமங்கள் ஆற்றக்கூடிய வாய்ப்புகளும் தோன்றியுள்ளன. இந்த இடைமுகத்தைக் கணினியில் காண்கின்ற நிலையானது திறன்பேசி (Smart phone) ஒன்றின் திரையைக் காண்பது போலவே தோன்றும். வழக்கமாக இடப்பக்க கீழ் மூலையில் காணப்படும் start button, இந்தப் புதிய Metro UI இடைமுகத்தில் இல்லை. ஏனெனில், Metro UI தான் புதிய start menu ஆகக் காணப்படுகின்றது.

> **உங்களுக்குத் தெரியுமா?**
> Windows 8 இன் வெளியீட்டுடன் தொடர்புடையதாக microsoft நிறுவனத்தின் இலச்சினையும் புதிதாக மாற்றி வடிவமைக்கப்பட்டுள்ளது. பின்வரும் படங்கள், மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தின் இலச்சினை தொடர்ச்சியாக எவ்வாறு மாற்றத்திற்குள்ளானது என்பதைக் காட்டுகிறது







*** metro செயலிகள்:** மெட்ரோ இடைமுகத்திற்கு ஏற்ற வகையிலும் அதனோடு அற்புதமாகப் பொருந்திப் போகக்கூடியதுமான செயலிகளும் இயல்பிருப்பிலேயே (default), Windows 8 இல் காணப்படுகின்றன. அத்தோடு, இந்த இடைமுகத்திற்கேற்ற வகையில் பிரத்தியேகமாகச் செய்யப்பட்ட செயலிகளை பயனர்கள் தரவிறக்கி (download), நிறுவிக்கொள்ளக்கூடிய வசதியும் Windows 8 இல் உள்ளது.

*** எங்கிருந்தும் அகற்றலாம்:** வழமையாக Windows பணிசெயல்முறைமையில் நிறுவப்பட்டுள்ள மென்பொருட்களை அகற்ற வேண்டுமாயின், அதனை Control Panel சென்று, குறித்த மென்பொருளைத் தெரிவுசெய்து அகற்ற வேண்டும். ஆனால், புதிய Windows 8 இல் எங்கிருந்த வேளையிலும் நீங்கள் அகற்ற நினைக்கும் மென்பொருளை அகற்றி விடுவதற்கான சாத்தியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால், இலகுவில் கணினியில் கருமங்கள் செய்ய வாய்ப்புண்டாகும் என நம்பலாம்.

*** பிரதி செய்தல் பற்றிய விபரம்:** ஒரு கோப்பொன்றை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குப் பிரதி செய்கின்ற போது, அந்த பிரதி செய்கின்ற நடவடிக்கை பற்றிய புள்ளி விபரங்களை அற்புதமாக Windows 8 காட்சிப்படுத்துகிறது. இதன்படி, குறிப்பிட்ட கோப்பு பிரதியாகின்ற வேகம், பிரதியாகிவிட எடுக்கும் நேரம் என்பனவற்றை மிகத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.







*** மைக்ரோசொஃப்ட் ஸ்டோர்:** பொதுவாக, மென்பொருள்களை பதிவிறக்கி நிறுவிக்கொள்கின்ற சேவையை வழங்குவதில் முன்னோடியாக அப்பிள் நிறுவனத்தைக் கூறலாம். அந்த வகையில், Windows 8 இற்குத் தேவையான பொருத்தமான செயலிகளை வழங்குகின்ற ஒரு மையமாக microsoft store ஐ Windows 8 உடன் மைக்ரோசொஃப்ட் அறிமுகப்படுத்தியுள்ளது.

*** குறைந்த நினைவகம்:** Windows 8 ஆனது, அதன் இயக்கத்திற்காக தேவையெனக் காட்டும் நினைவகத்தின் அளவு (RAM), மைக்ரோசொஃப்டின் முன்னைய விண்டோஸ் பதிப்புகளான Windows Vista, Windows 7 ஆகியவற்றின் நினைவகத்தின் அளவை விடக் குறைவாகும். இதன்படி, கணினிகளின் வன்பொருளில் மாற்றங்கள் ஏதும் செய்யாமலேயே, Windows 8 ஆனது, தனது விரைவான செயற்பாட்டைக் காட்டுவதாகக் கூறப்படுகின்றது.

புதிதாக விற்பனைக்கு வந்துள்ள இந்த Windows 8, மைக்ரோசொஃப்டின் முன்னைய பதிப்புகளைவிட, அதிகமானோரால் விரும்பப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வரைபடமாகும் கணினியின் பாகங்கள்

படைப்பாக்கம் மற்றும் கலை வடிவங்கள் என்பன நாளாந்தம் எடுத்துக் கொள்ளும் பரிமாணங்கள் வித்தியாசமானவை; வேறுபட்டவை. பல வேளைகளில் புதுமைகள் நிறைந்தவை. அந்தவகையில், கணினியின் உதிரிப் பாகங்களைக் கொண்டு, உலகத்தின் வரைபடத்தை அமைக்க முடியுமா? எனக் கேட்டால், ஆம் என்றே பதில் கூற வேண்டியுள்ளது. இங்கிலாந்தைச் சேர்ந்த சுசன் ஸ்டொக்வெல் என்ற கலைஞர், கணினி உதிரிப்பாகங்களைக் கொண்டு உலகத்தின் வரைபடத்தை பிரமாண்டமான முறையில் உருவாக்கியிருக்கிறார். உங்கள் பார்வைக்காக அவர் உருவாக்கியுள்ள பிரமாண்டமான வரைபடத்தின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன. அற்புதமான வகையில் உருவாக்கப்பட்டுள்ள வித்தியாசமான வரைபடத்தை முழுமையாகக் காண இந்த இணைப்பிற்குச் செல்லுங்கள்: http://goo.gl/Oq81Q

# 'TCP/IP' என்றால் என்ன?






இணையத்தில் கணினிகள், ஒன்றோடொன்று உரையாடிக் கொள்வதற்கான சாத்தியத்தை வழங்கும் சமவாயங்களாக (Protocols), 'TCP/IP' என்பதைக் குறிப்பிடலாம். 'TCP' என்பது Transmission Control Protocol என்பதாகும். அதேவேளை, 'IP' என்பது Internet Protocol ஆகும். இந்த TCP/IP என்பதே, இணையத்தில் கணினிகள் இணைந்துகொள்வதையும் அவற்றிற்கிடையே தரவுப் பரிமாறலுக்கான சாத்தியங்களையும் உண்டாக்குகின்றது. TCP ஆனது, செய்நிரல்கள் (Applications) ஒன்றோடொன்று தொடர்புபடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக: உங்களின் இணைய உலாவியானது, வலையமைப்பில் காணப்படுகின்ற செய்நிரலோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும் நிலையையே இது குறிக்கின்றது. இந்தத் தொடர்பாடலை சாத்தியமாக்கும் நிலையாக IP ஐ நாம் காணலாம். IP என்பது கணினிகளிடையே தரவுகளும் தகவல்களும் பொட்டலங்களாக கடத்தப்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகின்றது.

இந்த இரண்டு நிலைகளும் ஒருமிக்கச் சேர்ந்து இணையத்தின் அதிசயமான நிலைகளைத் தோற்றுவிக்கக் காரணமாகின்றன.



# இராமாயணம்






கூகிள் தனது புதிய முயற்சியாக, வால்மீகி முனிவரால் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்ட மிகப் பழைய இதிகாசமான இராமாயணத்தை நவீன நிலை நுட்பத்தின் பெறுதியான HTML 5 கொண்டு, அழகிய முறையில் உருவாக்கி வெளியிட்டுள்ளது. கூகிளின் இந்தப் பரீட்சார்த்த முயற்சியானது, கூகிள் க்ரோம் இணைய உலாவியிலேயே அற்புதமாகத் தோன்றும். இந்த இராமாயணமானது, பாஷா இந்தோனேசியா மொழியிலேயே வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பரீட்சார்த்த முயற்சியை எதிர்காலத்தில் ஏனைய பிறமொழிகளிலும் கூகிள் வெளியிடலாம் என எதிர்பார்க்கலாம்.

இந்த இராமாயண நவீன இடைமுகப்பு, நேர்த்தியான கலைச் சித்திரங்களையும் மனதைக் கவரும் பின்னணி இசையையும் கொண்டு அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய தளம், இராமாயணம் என்ற இதிகாசத்தைப் பற்றிய புரிதலை விரிவாக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, இராமாயணத்தை நவீன நுட்ப அழகியலோடு காண, இந்த முகவரிக்குச் செல்லுங்கள்: http://www.ramaya.na

# ஞாபகம் இருக்கிறதா?



இன்றளவில் பிரதானமான பணிசெயல் முறைகளாக (Operating Systems) Windows (விண்டோஸ்), Mac OS மற்றும் லினக்ஸ் (Linux) ஆகியன விளங்குகின்றன. ஒவ்வொரு பணிசெயல் முறையினதும் இடைமுகங்கள் (Interface) தனித்துவமாகக் காணப்படுவதோடு, மிகவும் வேறுபட்டும் காணப்படுகின்றது. இதனால், குறித்தவொரு கருமத்தை ஆற்றிவிட ஒவ்வொரு பணிசெயல்முறையிலும் வெவ்வேறு வகையில் செயற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதேபோல், ஒரே பணிசெயல்முறையில் அதன் வேறுபட்ட பதிப்புகளில் ஒரு குறிப்பிட்ட கருமத்தை ஆற்றிவிட வித்தியாசமான அணுகுமுறையைக் கையாள வேண்டும். ஒவ்வொரு பணி செயல்முறையினதும் வெவ்வேறு பதிப்புகளில் அதனை restart செய்யும் போது, தோன்றுகின்ற திரையும் கேட்கின்ற இசையும் வித்தியாசமானவை. இந்த நிலையை அற்புதமாக வெவ்வேறு பணி செயல்முறையின் செயற்பாடுகளை நிகழ்நிலையாக (real time) வெளிப்படுத்தும் ஒரு தளமும் உள்ளது. இத்தளத்திற்குச் சென்று restart button ஐ க்ளிக் செய்து, என்ன நடக்கிறது எனக் காணுங்கள். உங்களின் பழைய கணினியோடான ஞாபகங்களை அது மீட்டிவிடும். தளத்திற்கான முகவரி http://www.therestartpage.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அநுராதபுர யுகத்தில் ஆட்சி செய்த மன்னர்களில் குளங்களைக் கட்டுவித்த மேலும் பல மன்னர்கள்**

* **பண்டுகாபய மன்னன் (கி.மு. 437-367):** அபய வாவி அல்லது பசவக்குளம்
* **சத்தாதீச மன்னன் (கி.மு. 137-119):** கடுன்னரு, திவகுண, சோதகம் உள்ளிட்ட பெருங்குளங்கள் பன்னிரெண்டைக் கட்டியதாக வரலாறு குறிப்பிடுகின்றது.
* **இரண்டாம் பாதியதீசன் மன்னன்** (கி.பி. 136-160): வாமினிகுளம், கெமுனுகுளம் ஆகிய குளங்களைக் கட்டியதாக வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
* **மானவர்ம மன்னன் (கி.பி. 689-698):** இம்மன்னன் 8 குளங்களைக் கட்டுவித்ததாக பூஜாவலிய எனும் நூல் குறிப்பிடுகின்றது.

**பொலன்னறுவைக்கால மன்னர்களில் நீர்ப்பாசனத்திற்கு வித்திட்டவர்களில் சிலர்....**

## முதலாம் பராக்கிரமபாகு மன்னன் (கி.பி. 1153-1186)

பொலன்னறுவையை தலைநகராகக்கொண்டு முழு இலங்கையையும் ஆட்சிசெய்த மன்னர்களில் முதலாம் பராக்கிரமபாகு மன்னன் முக்கிய இடத்தை வகிக்கின்றார். 'மகா பராக்கிரமபாகு மன்னன்' என்றும் அழைக்கப்படும் இவரது ஆட்சிக்காலம் இலங்கையின் விவசாயத்துறையினதும் நீர்ப்பாசனத்துறையினதும் பொற்காலம் எனலாம். தெதுறு ஓயா நதியை மூன்று இடத்தில் மறித்து, அதன் குறுக்கே அணைகட்டி நீரைத்தேக்கி, அதன்மூலம் மழை இல்லாத காலங்களில் தாழ் உலர் வலயத்தில் வாழும் மக்களின் விவசாயத் தேவைகளுக்குரிய நீரை இவர் விநியோகித்தார். தோப்பா வாவியை தும்புட்டுலு வாவியுடன் இணைத்து அதி உன்னத நிர்மாணமாகிய மாபெரும் பராக்கிரம சமுத்திரத்தை உருவாக்கினார். சூளவம்சத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி, மகா பராக்கிரமபாகு மன்னனால் 165 அணைக்கட்டுகளும் 3,910 கால்வாய்களும் 163 பெருங்குளங்களும் 2,376 சிறுகுளங்களும் கட்டுவிக்கப்பட்டுள்ளதோடு, மேலும் பலவற்றை புனர்நிர்மாணம் செய்துள்ளார். மின்னேரியா, கிரிதலே, பதவியா, அங்கமு, நாச்சாதூவ ஆகிய குளங்கள் அவற்றில் முக்கியமானவையாகும்.

## முதலாம் உதயன் மன்னன் (கி.பி. 780-785)

சிறிது காலம் மாத்திரமே இவர் ஆட்சி செய்தார். இம்மன்னன் தனது ஆட்சிக்காலத்தில் பல குளங்களைக் கட்டியதாக வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

## முதலாம் விஜயபாகு மன்னன் (கி.பி. 1051 - 1106)

சோழர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த முதலாம் விஜயபாகு மன்னன், சோழர்களால் கைவிடப்பட்டிருந்த சில நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு புத்துயிர் அளித்தார். அவரது நீர்ப்பாசனத் துறை சேவைகள் குறித்து ஊவா மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## இரண்டாம் அக்போ மன்னன் (கி.பி. 612-622)



முதலாவது அக்போ மன்னனுக்குப் பின்னர் இரண்டாம் அக்போ மன்னன் அநுராதபுர ராச்சியத்தின் மன்னனாக முடிசூட்டப்பட்டார். இவர் 'சின்ன அக்போ' என்றும் அழைக்கப்பட்டார். இலங்கையின் பண்டைய நீர்ப்பாசனத்துறையைப் பற்றி ஆராயும்போது, இம்மன்னனுக்கும் மிக முக்கிய இடமொன்று உள்ளது. இலங்கையின் விவசாயத்தில் இன்றளவிலும் மிகப்பெரிய பங்கினை வகிக்கும் கந்தளாய் மற்றும் கிரிதலே குளங்களை இவரே கட்டுவித்தார். கந்தளாய் குளத்திற்கு மின்னேரிய குளத்திலிருந்துதான் நீர் வழங்கப்படுகின்றது. இது முதலாவது அக்போ மன்னனால் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனத் திட்டத்தை மேலும் விரிவாக்கியதாக எடுக்கப்பட்ட முயற்சியாகக் கருதப்படுகிறது. அத்தோடு, நதிகளை திசை திருப்பியும் நீரைச் சேமித்து வைத்தும் நீரை பயனுள்ள வகையில் விவசாயத்திற்கு உச்சமாகப் பயன்படுத்த வைத்ததும் இம்மன்னன் ஆட்சியிலேயே ஆகும்.

இரஞ்சித் ஜெயகர்



# தந்தங்களால் சண்டையிட்டு உயிரைப் பாதுகாத்துக்கொள்ளும் 'வோல்ரஸ்'

'வோல்ரஸ்' (Walrus) மிகப்பெரிய கடல்வாழ் பாலூட்டி உயிரினமாகும். ஆர்க்டிக் சமுத்திர வலயத்திலும் அதனை அண்டிய கடல் பகுதிகளிலும் இவற்றை அதிகம் காணலாம். வோல்ரஸ்களுக்கு சமுத்திரத்தின் 300 அடி ஆழம்வரை மூழ்கிச் சென்று, தம் இரையைத் தேடி மீண்டும் மேற்பரப்பை வந்தடைய 12 நிமிடங்கள் போதுமானதாகும். பொதுவாக, சுமார் 2,000 றாத்தல்கள் நிறையுடைய வோல்ரஸ் ஒன்றிற்கு, மனிதர்களுக்கு ஏற்படும் பசியைவிடப் பல மடங்கு பசி ஏற்படுகின்றது. இவை தமக்கிருக்கும் தடிப்பான மீசைகளின் உதவியுடன் சமுத்திரத்தின் கீழ்ப்பரப்பில் வசிக்கும் மொலஸ்காக்களையும் ஏனைய மீன் வகைகளையும் மோப்பம் பிடித்து, அவற்றைத் தம் உதடுகளுக்கிடையே கவ்வியவாறு குறித்த இரையின் மிருதுவான இழையங்களை உறிஞ்சி உட்கொள்கின்றன.

அதேவேளை, வோல்ரஸ்களை உணவாக்கிக்கொள்ளும் உயிரினங்களும் இருக்கின்றன. வோல்ரஸ்ஸின் முக்கிய எதிரிகளாக மனிதன், Killer Whales எனும் ஒருவகைத் திமிங்கிலம், துருவக்கரடி என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுக்கு வோல்ரஸ்ஸின் தந்தங்களே ஆபத்து மிக்கவையாகத் திகழ்கின்றன. எனினும், இவை பொதுவாகத் தம் உயிரைப் பணயம் வைத்தே இந்த வோல்ரஸ்களைத் தாக்குகின்றன.

வோல்ரஸ்கள் தம்மைத் தாக்கவருகின்ற எதிரிகளை தமக்கிருக்கும் தந்தங்களைக்கொண்டே தாக்குகின்றன. அந்தத் தந்தங்கள் எதிரியின் உடலில் குத்தும் சந்தர்ப்பத்தில் உடலில் 3 அடிகள் வரை உள்ளே செல்லக்கூடியன. இந்த ஒரே காரணத்திற்காகவே, துருவக்கரடிகள் வோல்ரஸ்களை வேட்டையாடும்போது, முழுமையாக வளர்ச்சியடையாத ஓர் இளம் வோல்ரஸ்ஸை இனங்கண்டதன் பின்னரே, அதனை வேட்டையாடத் தயாராகின்றன.

சில தசாப்தகாலங்களாக வோல்ரஸ்களின் மொத்த எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சியைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கான காரணம்: அவற்றின் உடலில் உள்ள கொழுப்பின்மூலம் எண்ணெய்யைப் பெற்றுக்கொள்வதற்கும் தந்தங்கள்மூலம் ஆபரணங்களை வடிவமைத்துக்கொள்வதற்கும் அவை பெருமளவில் வேட்டையாடப்படுகின்றமையாகும். எனினும், 1972 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க கடல்வாழ் பாலூட்டிகள் பாதுகாப்புச் சட்ட அமுலாக்கத்தின் பிரகாரம், தற்போது வோல்ரஸ்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்வடைந்து வருகின்றது.

தாய் வோல்ரஸ்ஸின் மீசைகளால் சேய் வோல்ரஸ்களுக்கு வழங்கப்படும் மென்மையான வருடலானது, தாய்-சேய்க்கிடையிலான பிணைப்பை மேலும் அதிகரிக்கின்றது.வோல்ரஸ் குட்டிகள், பிறந்து சில மணிநேரத்திலேயே, நீந்தக் கூடிய ஆற்றலை இயல்பாகவே பெற்றுவிடுகின்றன. சிலவேளைகளில் அவை தமது தாயின் முதுகிலிருந்தவாறு நீரில் வலம்வரும்.


எம்.ஜீ.எஃப்.பர்ஹா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிர்கரம்


வழங்குபவர்: ஆசிரியை றோஸ்மலர்




வெற்றிடங்களை நிரப்பவும்



பொருத்தமான படங்களை இணைக்கவும்



வட்டத்தினுள் உள்ள பழங்களின் எண்ணிக்கையை மாத்திரம் குறிப்பிடவும்

புள்ளிகளை இணைத்து, படத்திற்கு நிறந்தீட்டுக.



# ஊடக பாடநெறி 05



(சென்ற வாரத் தொடர்ச்சி....)

சிறுவர்களிடம் ஊடகக் கல்வி செயற்பாடுகள் ஊடாக, ஊடக உள்ளடக்கங்களை விசாரனை செய்தல், பகுப்பாய்வு செய்தல் போன்ற பயிற்சிகளை வழங்குதல் முன்வைக்கும் விடயங்களை சரியாக விளங்கும் ஆற்றல், ஊடகம் மறைக்கும் விடயங்களை ஊகித்து அறியும் ஆற்றல், ஊடக நிகழ்ச்சி நிரலை இனங்கண்டு கொள்ளல், ஊடக உத்திகள், உபாயங்களை நுணுக்கமாக ஆராய்தல், ஊடகங்களில் வெளிவரும் விடயங்களைப் பயனுள்ள வகையில் தெரிதல், அதனைப் பயனுள்ள தாக்குதல், ஊடக நிறுவனக் கட்டமைப்பு, பணித்துறையை விளங்குதல், ஊடகங்கள் தொடர்பான துலங்கல்களை வெளிப்படுத்தல், சமூக அபிவிருத்திக்கான ஆக்க ரீதியிலான ஊடகத்திறனை ஆய்வு செய்யவும் உணர்திறன் மிக்க ஊடக கலாசார எழுச்சிகளிற்கும், உந்தல்களுக்கும், சமூக பிரதிநிதித்துவ ஊடக உள்ளடக்க பரிமாணங்களை விளங்குவதற்கும் தகவல் ஊடக அறிவு நிலைகள் கட்டியெழுப்பப்படல் அடிப்படையாகின்றன. ஊடகங்களை கற்றலுக்காகப் பயன்படுத்துவதன் வழிமுறைகளை இனங்கண்டுகொள்ளல்:- இன்று Education-Entertaiment=Edutainment என்ற பதம் ஊடகங்களையும் பொழுது போக்கையும் இணைத்து, பொழுது போக்கு நிகழ்ச்சி உள்ளடக்கங்கள் ஊடாக, அறிவூட்டல் என்ற புதிய சிந்தனை அறிமுகம் செயற்பட்டுள்ளது. ஊடக வழிமூலம் புதிய சொற்களை அறிதல், வாக்கிய முறைகள், கருத்தை உருவாக்கல், தகவல்களை அறிவோடு சேர்த்தல், செவிமடுத்தல் திறன் பேச்சுப்பாணி, ஆக்கத்திறன், அழகியல் எண்ணம், ரசனை, காட்சியுணர்வு, அறிவும் காட்சியும் இணைதல், கட்புல செவிப்புல விருத்தி, ஐம்புலன் வழிமூலம் கற்றல் என ஊடகங்கள் கற்றல் செயன்முறையில் பங்களிப்பு பெறுவதை உணர்த்துதல், அதனைப் பொருத்தமாகக் கையாளப் பழகுதல் என்பன ஊடகத் தகவல் அறிவு நிலையூடாகவே சாத்தியமாகின்றன.



## ஊடகங்களின் கடமையும் பொறுப்பும்

பொதுவாக ஊடகங்களின் பொறுப்புக்கள் என்பதும் பரந்துபட்ட இயல்புகளை உள்ளடக்கியது எனலாம். சமூகப் பிரதிநிதித்துவம் ஊடகக்கடமையையும் பொறுப்பையும் முதன்மைப்படுத்துகின்றது. சமூகத்தில் நீதி, நியாயம் நிலைக்க பேசுதல், தகவலை வழங்குதல், ஆழ்பவர்-ஆழப்படுபவரிடையே சீரான தகவலை அளித்தல், ஜனநாயக வாழ்க்கைக்கு உதவும் கருத்தைப் பரவலாக்கல், பிரச்சினைகளைத் தீர்த்தல், அவற்றுக்கு உதவுதல், சமூகப் பொறுப்பை உணரச் செய்தல்,பண்பாட்டு கலாசார அம்சங்களை வெளிக்கொணர்தல், விழிப்புணர்வூட்டல் என இதன் நிலைகள் விரிவடைகின்றன. இதன் நிலைகளை இனங்காணவும் அதற்கேற்ப செயல்நிலைகளை முன்னெடுக்கவும் ஊடகத்தகவல் அறிவு அடிப்படையாகின்றது.

## ஊடகத்தகவல் அறிவின் வெளிப்பாடு

ஊடகத்தகவல் அறிவு சிறுவர் மத்தியில் ஏற்படுத்தப்படுமாயின், அவர்களின் விழிப்புணர்வுள்ள ஊடக பெறுநருக்குரிய துலங்கல் வெளிப்பாடுகளை இனங்காண முடியும். அழகியல் ரசனைக்குரிய நிகழ்ச்சிகள், அறிவுபூர்வமான நிகழ்ச்சிகள், செய்திகள், அறிவியல் ஒலி-ஒளி பரப்புக்கள், ஊடகங்களை தெரியவும் அவற்றை யதார்த்தபூர்வமாக உள்வாங்கவும் உளப்படிமங்கள் கட்டியெழுப்பப் படும். உணர்திறன்மிக்க ஊடக



தகவல் மையங்களை அறியும் ஆளுமை விருத்திகள் உருவாக்கப்படும். மொத்தத்தில் ஊடக ஆய்வு, விசமர்சனம், பகுப்பாய்தல், திறன்கள் வெளிக்காட்டப்படும். (தொடரும்)


**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
ஆசிரியர் - தொடர்பாடல் ஊடகக்கல்வி யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துவிச்சக்கர வண்டியைத் தோற்றுவித்தவர்கள்


ஆரம்பகாலங்களில் துவிச்சக்கர வண்டியில் சவாரி செய்தவர்கள் தமது கால்களை தரையில் ஊன்றித் தள்ளியே துவிச்சக்கர வண்டியை இயக்கினர். பின் ஒரு வழியாக சைக்கிள் சவாரி செய்பவரின் கால்கள் பூமியில் பதியாத ஒரு நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து, சரிவான பாதையில் போகும்போது, வேகத்தைக் கட்டுப்படுத்த பிரேக்குகளை மாக்மில்லன் என்பவர் பயன்படுத்தினார். சக்கரத்துடன் இணைந்துள்ள கம்பிக்குப் பதிலாக ஹாண்டில் பாரையும் மாக்மில்லன்தான் உருவாக்கினார்.



மாக்மில்லனுடைய இந்த சைக்கிளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு 25 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் சைக்கிளில் முன் சக்கரத்தோடு பெடல்கள் (மிதிகள்) அமைக்கப்பட்டன. இதைக் கண்டுபிடித்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பீரி லால்மென்ட் (Pieree Lallmend) என்பவர் ஆவார்.

இந்தப் பெடலை ஒருமுறை சுற்றினால் முன்சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றும். இன்றைய குழந்தைகள் மூன்று சக்கர வண்டியை இயக்குவது போல் அது காணப்பட்டது. இந்த நிலையிலும் சைக்கிளின் சக்கரங்கள் மரத்தாலானவையாகவே இருந்தன. இதற்கு இரும்புப் பட்டை அதாவது, இன்றைய மாட்டு வண்டிச் சில்லுகளுக்குப் போடப்பட்டிருப்பது போன்று போடப்பட்டிருக்கும். இதில் இருக்கும் ஆசனத்திற்கு ஸ்பிரிங் இயக்கம் கிடையாது. ஆகவே, இது வீதியில் போகும்போது அதிகமான குலுக்கல் ஏற்படும். இதனால், இவ்வகை வண்டிகளை பிரிட்டிஷ் மக்கள் 'போன் ஷேக்கர்' என்றழைத்தார்கள்.

*எச்.பஷ்ரி, அஸார் கல்லூரி., அக்குறனை.*



## அப்துல் கலாம்

தென்கரை எழில் கொஞ்சும்
பொன்மாலை கடற்கரையாம்
தமிழகத்தில்
புகழுலகும் இராமேஸ்வரத்தில்
பிறந்துதித்தார் கலாம்.

இளந்துடிப்பும் மிடுக்கான
பார்வையும்
அளவுலாவும் அறிவும்
வானளாவும் அறிவியலும்
விண்ணளாவ மிளிர்கின்றன.

எளிமையான உடைதனிலே
பார்போற்றும் குடியரசுத்தலைவராயும்
அணு விஞ்ஞானியாகவும்
மிளிர்கின்றார் கலாம்.

இளமை முதல் சுறுசுறுப்பும்
தன் சுயதேடல் கற்கை நெறிகளும்
விண்ணளாவ ரொக்கெட்டுகளாய்
வலம் வருகின்றன வான்வெளியில்.

வி.உ.ரோமிளா,
இளவாளை கன்னியர் ம.ம.வித்.,யாழ்ப்பாணம்.

## தொடர்மொழிக்கு ஒரு மொழி

01. நிகழ்ச்சியொன்றைப் பலர் அறிய முதன்முதலாக மேடையேற்றுவது;
*அரங்கேற்றம்*

02. நூலொன்றுக்கு நூலாசிரியர் அல்லாத வேறொருவரால் எழுதப்படும் உரை.
*அணிந்துரை*

03. ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்.
*அட்டவதானி*

04. எழுபத்தைந்தாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா
*பவள விழா*

எம்.டி.சம்ருதா பர்வின்,
ஸ்ரீராமகிருஷ்ணா கல்லூரி,
லுணுகல.

## சேர்வைகளின் இயல்புகள்!

1. $O_2$ = எரியும் தீக்குச்சி பிடிக்கும்போது பிரகாசமான சுவாலையுடன் எரியும்.

2. $So_2$ = தெளிந்த சுண்ணாம்பு நீரைப் பால்நிறமாக மாற்றும்.

3. $H_2S$ = கூழ் முட்டையின் மணமுடையது.

4. $Cl_2$ = நிறம் உள்ள பொருட்களை வெளிற்றும்.

5. $N_1H_2$= Hcl இல் தோய்த்த முடியைப் பிடிக்கும் போது, வெண் தூமம் தரப்படும்.

எஸ்.எம்.ஃபயாசி,
நச்சதுவ முஸ்.ம.வித்.,
நச்சதுவ.

## நேரம் சரியில்லை



இடி மின்னலுடன் கடும் மழை பெய்துகொண்டிருந்தது. ஒரு கிராமத்தை நோக்கி வந்துகொண்டிருந்த மக்களில் சிலர் மழைக்காக அருகில் இருந்த ஒரு பாழடைந்த வீடொன்றில் ஒதுங்கினர். அவர்களில் ஒருவர் சோதிடர். அவர் கடுமையான இடி மின்னலைப் பார்த்துவிட்டுச் சொன்னார் "இங்குள்ளவர்களில் ஒருவருக்கு நேரம் சரியில்லை. ஆகவே, அவர் தலையில் சிறிது நேரத்தில் இடி விழப்போகிறது" என்றார். இதைக் கேட்டு அனைவரும் அஞ்சி நடுங்கினர். நேரம் சரியில்லாத ஒருவரால் இங்குள்ள அனைவரும் பாதிக்கப்படுவதா? அந்த ஆள் யார் என்று எப்படிக் கண்டுபிடிப்பது?" இவ்வாறு ஒருவர் வினவினார். இந்த வயதான கிழவர்தான் நேரம் சரியில்லாத மனிதர் போலத் தெரிகிறது. எனவே, நாம் அவரை இங்கிருந்து வெளியே விரட்டி விடுவோம்" என்றார் இன்னொருவர்.




இதனை அனைவரும் ஆமோதித்தனர். கிழவர் வேறு வழியில்லாது மழையில் நனைந்தபடியே மெதுவாக அங்கிருந்து வெளியேறி சிறிது தூரத்தில் உள்ள ஒரு மரத்தடியில் நின்றுகொண்டார். அப்போது ஒரு பெரிய இடி இடித்தது. கிழவர் அச்சத்தால் கண்ணை மூடிக்கொண்டார். சிறிது நேரம் கழித்து கண்களைத் திறந்து பார்த்தபோது, அந்த பாழடைந்த வீட்டின் மேல் இடி விழுந்து தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது.

வி.பிருந்தாபன்,
சிவசக்தி வித்தியாலயம்,
நற்பிட்டிமுனை.

## 'ஒக்டோபஸ்' பற்றி அறிந்ததும் அறியாததும்

கடல்வாழ் உயிரினங்களில் விசித்திரமான ஒன்றுதான் 'ஒக்டோபஸ்' இது சிலந்தியைப் போன்று 08 கால்களைக் கொண்டதனால் கடல் சிலந்தி என்றும் சிலந்தி மீன் என்றும் அழைக்கின்றனர். பெரிய தலைப்பகுதியையும் துதிக்கை போன்ற நீளமான எட்டுக் கைகளையும் வழுவழுப்பான உடலையும் முகத்தின் இரு மருங்கிலும் சிறிய இரு கண்களையும் கொண்டதாக ஒக்டோபஸ் காணப்படுகிறது.

இது, எலும்புகள் ஏதுமற்ற தசையாலான உயிரினமாகும். இதன் எட்டுக் கைகளும் அவற்றின் உயிர் வாழ்க்கைக்கு மிக முக்கியமா... தாகும். கடலடி நிலத்தில் ஊர்ந்து செல்வதற்கும் கற்களையும் தாவரங்களையும் பற்றி நகர்வதற்கும் இதன் கைகள் உதவுகின்றன. இவற்றின் கைகள் உறுதியான தசை நார்களைக்கொண்டு அமைந்துள்ளன. இவற்றின் கைகளின் நுனிப்பகுதி சிறிதாக $2\frac{1}{2}$ அங்குலத்தில் விரல் போன்று இருப்பதனால் சிறு பொந்தினுள்ளும் அதனை நுழைத்து இரைகளைத் தேடிக் கொள்கின்றன. இதற்கு மூன்று இதயங்கள் உள்ளன. இவை மூன்றும் சுவாசிக்க உதவும். இதன் குருதிகூட நீல நிறமானதாகவே காணப்படும். இதன் வளர்ச்சி 5cm - 6cm வரையானதாகும். இதன் ஆயுட்காலம் 4-5 வருடங்களாகக் காணப்படுகின்றது.



*றிஸ்கினா முஸம்மில்,*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



திஹாரி-நாப்பிரித்தையைச் சேர்ந்த நிஸ்ரான்-சரசாத் தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா நிஸ்மா, 29.10.2012 அன்று தனது முதலாவது பிறந்தநாளை விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: எப்.சஹானா)






தெகிவளை வெண்டவர்ட் பிளேஸைச் சேர்ந்த சிவஞானம்-சாந்தகுமாரி தம்பதியரின் செல்வப் புதல்வன் சத்யன், 28.10.2012 அன்று தனது பதினொராவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் இறைவனின் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



கொழும்பு 12 சென்றல் ரோட்டைச் சேர்ந்த மர்ஸூக்- பசீனா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ஸஸ்னா, 20.10.2012 அன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: பாத்திமா பராஸா)



உன்னஸ்கிரியவைச் சேர்ந்த சுரேஸ்-ராஜேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வன் எஸ்.வுதேஷன், தனது முதலாவது பிறந்தநாளை 16.10.2012 அன்று தமது இல்லத்தில் விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

# பொலன்னறுவைக் கால கலைப்படைப்புக்கள்

பொலன்னறுவைக் காலமானது, கி.பி. 10-13 நூற்றாண்டு வரை நிலவியது. இக்காலத்தில் இங்கு இரண்டு வகையான கலை-கலாசார அம்சங்கள் நிலவின. அவை பௌத்த, இந்துசமயக் கலை-கலாசாரங்கள் ஆகும். சோழ மன்னர்கள் இந்து சமயக் கலைகளையும் சிங்கள மன்னர்கள் பௌத்த சமயக் கலைகளையும் வளர்த்தனர்.







* சந்திரவட்டக்கல்
* தாமரைக்குளம்

மகா பராக்கிரமபாகு மன்னர் காலத்தில் சிறப்பாக கலைகள் வளர்ந்துள்ளதை சூளவம்சம், கல்வெட்டுகள், ஓவியங்கள், சிற்பங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. மேலும், பௌத்த சமய கலைப்படைப்புக்களில்இந்து சமயக் கலைப் படைப்புக்களின் செல்வாக்கையும் காண முடிகின்றது.

## திவங்க சிலை மனை

இச்சிலை மனை 12 ஆம் நூற்றாண்டில் முதலாம் பராக்கிரமபாகு மன்னரால் கட்டப்பட்டது. திவங்க சிலை இருப்பதால் இப்பெயரைப் பெறுகின்றது. முன்பிருந்த ஓவியங்களுக்கு மேலாக சாந்து (சுதை) பூசப்பட்டுப் புதிதாக ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.




இங்குள்ள ஓவியங்கள் பொலன்னறுவைக்கால இறுதிப் பகுதிக்குரிய ஓவியங்களாகும். அவை ஜாதகக் கதைகளுடன் சம்பந்தப்பட்டவை. இந்த ஓவியங்களில் சிவப்பு,பச்சை, மஞ்சள் ஆகிய நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், ஆடை-அணிகள் தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த ஓவியங்களுக்கும் அஜந்தா ஓவியங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன.




**பொலன்னறுவைக்கால பௌத்த சமயக் கலைப் படைப்புகள் சில....**

* திவங்க சிலை மனை
* பராக்கிரமபாகு சிலை
* கல்விகாரை
* லங்காதிலக விகாரை
* வட்டதாகே
* நிசங்கலதா மண்டபம்
* பபுலு விகாரை
* கிரி விகாரை
* தூபாராம

(தொடரும்)




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ரா.மேகலா,
பெரியபுலம் மகா வித்.,
யாழ்ப்பாணம்.



முனவ்ரா ஃபைஸல்,
அளுத்கம வீதிய மு.பெ.தே.பாட.,
தர்கா நகர்.



எம்.நஸ்லிம்,
அல்மினா முஸ்லிம் மகா வித்.,
மீயல்லை.



எம்.நபீல்,
அஷ்-ஷம்ஸ் மு.வித்., கெலிஓயா.



ஆர்.சாருகேசன்,
அயரபி தமிழ் வித்., நோர்வுட்.



எம்.அக்ரம்,
அல்-அஸ்ஹர் ம.வித்., மன்னார்.



பி.வினித்ராஜ்,
சித்திவிநாயகர் இந்.கல்., மன்னார்.



கு.இந்துஷன்,
விபுலானந்தா மத்திய கல்., காரைதீவு.



ட.ருஸ்தா,
கால்லேகம் மெ.மு.வித்., கால்லேகம்.



உ. லபிஷினி,
பெண்கள் உயர்தர பாட., கண்டி.

### பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா

**அரசு:** இரு சட்டசபைகள்கொண்ட கூட்டுக்குடியரசு.

**ஜனாதிபதி** (2012): விளாடிமிர் புடின்.

**பிரதமர்** (2012): டிமிட்ரி மிட்வெடெவ்.

**அமைப்பு:** கி.பி. 1721 ஒக். 21- ரஷ்யப் பேரரசு; கி.பி. 1917 நவம்பர் 7- ஐக்கிய சோவியத் சமஷ்டி சமவுடமைக் குடியரசு; கி.பி. 1922 டிசம்பர் 10- ஐக்கிய சோவியத் சமவுடமைக் குடியரசு; கி.பி. 1991 டிசம்பர் 25- ரஷ்ய சமவுடமை நாடுகள்.



பிரதமர் ஜனாதிபதி

**நிலப்பரப்பு:** 6,592, 812 ச.மைல் (17,075,400 ச.கி.மீற்றர்).

**உயர் மலைச்சிகரம்:** எல்ப்ருஸ் மலை (5,633 மீற்றர்).

**தாழ்மையம்:** கஸ்பியன் கடல் (28 மீற்றர்).

**சனத்தொகை** (2011): 138,082, 178.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** மொஸ்கோ.

**ஏனைய பெரிய நகரங்கள்:** சென்ட் பீற்றர்ஸ்பேர்க், நொவொஸி பிர்ஸ்க், யெக்காடெரின்பர்க், நிஸ்னி நோவ்கொரொட், சமாரா, கஸான்.

**நாணயம்:** ரஷ்ய ரூபிள்

**மொழிகள்:** ரஷ்யமொழி, பல சிறுபான்மை மொழிகள்.

**இனக் குழுவினர்கள்:** ரஷ்யர், டடார், யுக்ரேனியர், பாஷ்கிர், சுவாஷ், ஏனைய குழுவினர்கள்.

**சமயங்கள்:** ருஷ்ய ஓர்த்தடொக்ஸ் கிறிஸ்தவம், ஏனைய கிறிஸ்தவம்,இஸ்லாம்.

**எழுத்தறிவு** (2002): 99.4%

**இணையத்தளக் குறியீடு:** .ru, .su, .pcb

**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** +7

**தேசிய கீதம்**

Rossiya – svyashchennaya nasha derzhava,
Rossiya – lyubimaya nasha strana.
Moguchaya volya, velikaya slava –
Tvoyo dostoyanye na vse vremena!..
என ஆரம்பமாகின்றது.



ரஷ்ய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம்



மொஸ்கோவிலுள்ள Saint Basil's தேவாலயம் (ரஷ்யாவின் கட்டடக்கலையின் உன்னத வெளிப்பாடு)

## புவியியல்

ரஷ்யா, மேற்கில் போல்டிக் கடலில் இருந்து கிழக்கே பசுபிக் சமுத்திரம் வரையும் வடக்கில் ஆர்க்டிக் சமுத்திரத்தில் இருந்து தெற்கில் கருங்கடல், காகசஸ் மலைப்பகுதிகள் வரையிலும் பரந்துள்ளது. இதன் வட மேற்கில் நோர்வே மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளும் மேற்கில் எஸ்தோனியா, லெட்வியா, பெலருஸ் மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளும் தென் மேற்கில் ஜோர்ஜியா மற்றும் அஸர்பைஜான் என்பனவும் தெற்கே கஸகஸ் தான், மொங்கோலியா, வடகொரியா, சீனா ஆகிய நாடுகளும் எல்லைகளாக அமைந்துள்ளன. வொல்கா, டினிப்பர், டிவினா, லீனா, ஒப், யெனிசி, ஆமூர் என்பன ரஷ்யாவின் மிக முக்கிய நதிகளாகும். 'கடல் மட்டத்திலிருந்து 1,642 மீற்றர் (5,387 அடி) உயரத்தில் உலகிலேயே மிக ஆழமானதும் நன்னீரைக் கொண்டதுமான பைக்கால் ஏரி அமைந்துள்ளது.

**மொத்தப்பரப்பு:** 6,592, 735 ச.மைல் (17,075,200 ச.கி.மீற்றர்).





தேசிய இலச்சினை





## வரலாறு

கி.பி. 862 இல் ரூரிக் கொள்ளைக்காரர்கள் ரஷ்யாவிற்கு வந்து தமது முதலாவது ஆட்சியை நோவ்கொரொட் பகுதியில் நிறுவினர். 11 ஆம் நூற்றாண்டில் கியூ மகா பிரபுக்கள் தமது ஆட்சியை ரஷ்யாவில் அமைத்தனர். ஆனால், 1240 இல் மொங்கோலியர் அவ்வாட்சி அதிகாரத்தை ஒழித்து, தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர். 15 ஆம் நூற்றாண்டு முதல் ஸார் சக்கரவர்த்திகளின் ஆட்சி ஆரம்பமாகியது. ஸார் மன்னர் பரம்பரையில் 1689 முதல் 1725 வரை ஆண்ட மகா பீற்றர், மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த ரஷ்யாவை ஒரு முன்னிலை நாடாக அபிவிருத்தி செய்தார்.1709 இல் 12 ஆம் சார்ள்ஸ் மன்னர் காலத்தில் சுவீடன் நாட்டுடன் எல்லைப் போர் ஆரம்பமாகியது. மகா கத்தரின் காலத்தில் ரஷ்யாவின் எல்லை கிரமியா, உக்ரைன் [illegible] பகுதி என விரிவடைந்தது. ஆனால், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த ஸார் மன்னர்களின் தவறான ஆட்சியின் விளைவாக, நாடு மிக மோசமான நிலையை அடைந்தது.

நாட்டின் தவறான ஆட்சியும் வறுமையும் நாட்டைப் புரட்சியை நோக்கி இட்டுச் சென்றது. அதன் பிரதிபலனாக 1917 மாபெரும் ரஷ்ய கம்யூனிஸ புரட்சி ஏற்பட்டது. ரஷ்யாவின் அடுத்துள்ள குடியரசுகளை ஒன்றிணைத்து 1922 இல் சோவியத் யூனியன் உருவானது. நாட்டை உருவாக்கிய லெனினின் மறைவைத் தொடர்ந்து, 1924 முதல் ஜோசப் ஸ்டாலினின் தலைமையில் கம்யூனிஸ ஏதேச்சதிகாரம் ஆரம்பமாகியது. 1987 ஆம் ஆண்டு கோர்ப்பச்சேவ் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தார். 1991 இல் கம்யூனிஸ ஆட்சி முடிவுக்கு வந்தது. கூட்டமைப்பில் இருந்த 15 குடியரசுகளும் சுதந்திரப் பிரகடனம் செய்தன. ரஷ்யாவை சுதந்திர நிலைக்கு இட்டுச் சென்ற அதிபர் போரிஸ் எல்ஸ்டின், 1999 இல் பதவி விலகினார். தற்காலிக அதிபராக இருந்த பிரதமர் புடின் பின்பு நாட்டின் அதிபராக தெரிவு செய்யப்பட்டார். 2004 மார்ச்சில் இவர் மீண்டும் இரண்டாம் முறை அதிபராகத் தெரிவானார்.

## கலாசாரம்

ரஷ்ய கலாசாரமானது, குறிப்பிட்ட தனித்துவமான ரஷ்ய இனக்குழுக்களுக்கேயுரிய பாரம்பரிய கலாசார பிரதிபலிப்புகளைக் கொண்டது. குறிப்பாக; சிற்பம், ஓவியம், இலக்கியம்,தத்துவம், இசை, நடனம், கட்டடக்கலை, திரைப்படத்துறை மற்றும் உணர்ச்சி வெளிப்பாடு போன்றவற்றில் உலகின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ரஷ்ய கலாசாரம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## காலநிலை

மிகப் பாரிய நிலப்பரப்பைக்கொண்ட நாடாக ரஷ்யா திகழ்வதால், பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபட்ட காலநிலை நிலவுகின்றது. நாட்டின் தென்மேல் பகுதியில் மாரிகாலம் இதமானதாகக் காணப்படும். உள்நாட்டிலும் வடமேற்கிலும் குளிர்காலநிலை காணப்படுவதோடு, வட துருவப்பகுதியிலும் வடசைபீரியாப் பகுதியிலும் கடுங்குளிர் நிலவும். கோடைகாலத்தில் மேற்கிலும் மத்திய பிராந்தியங்களிலும் ஓரளவு வெப்பமாகவும் அதேவேளை, இதமானதாகவும் காணப்படும்.

## தெரிந்து கொள்வோம்



✱ டைனோசரைப் பின்னணியாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'ஜுராசிக் பார்க்' எனும் திரைப்படத்தைத் தயாரித்தவர் யார்?
ஸ்டிவன் ஸ்பீல்பேர்க்.



✱ நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோ என்பதாகும். அவ்வாறே, சுவீடனின் தலைநகரம் எது?
ஸ்டொக்ஹோம்.

✱ தமிழ் மொழியில் உள்ள மெய் எழுத்துக்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை எவை?
மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.
வல்லினம் - க், ச், ட், த், ப், ற்
மெல்லினம் - ங்,ஞ், ண், ந், ம், ன்
இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்



✱ முற்காலத்தில் புவி ஒரு கண்டமாகவே இருந்துள்ளது. அவ்வாறு ஒரேயொரு கண்டமாக இருந்த நிலப்பரப்பு எவ்வாறு அழைக்கப்பட்டது?
'பஞ்ஜியா' கண்டம். ('பென்ஜியா' என்றும் அழைக்கப்படுகின்றது)

✱ பின்வரும் நகரங்களில் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் பொருந்தவில்லை. அது எந்த நகரம்?
1. ஜெனிவா 2. பேர்ண்
3. சூரிச் 4. லிஸ்பன்
விடை: லிஸ்பன். ஏனையவை சுவிற்சர்லாந்திலுள்ள பிரதான நகரங்களாகும்.



✱ பப்பாசி, தோடை, மாதுளம் பழம், தூரியங்காய், பலாப் பழம் போன்றவை பல வித்துத் தாவரங்களாகும். அவ்வாறே, ஒரு வித்துத் தாவரங்களுக்கு உதாரணம் தருக.
தேங்காய், பனை, றம்புட்டான், ஆனைக் கொய்யா.

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல்

பெயர்: ..................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

★ *01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின்கீழ்க் கோடிடுக.*

01) ஆவணி மாதத்தில் பூக்கும் தாவரம் எது?

1. இறப்பர் 2. இலுப்பை
3. ரம்புட்டான் 4. வேம்பு

02) ஔடதபானங்கள் தயாரிக்கப் பயன்படும் பூ எது?

1. வில்வம் பூ 2. வைகாசிப் பூ
3. அலரிப் பூ 4. அந்தூரியம்

03) ஆறு இதழ்களைக் கொண்ட பூ எது?

1. திருவாத்திப் பூ 2. பவளமல்லிகை
3. எக்சோரா 4. கடதாசிப் பூ

04) நறுமணத்தைக் கொண்ட பூ எது?

1. குண்டு மல்லிகை 2. கடதாசிப் பூ
3. முள்முருக்கு 4. செவ்வரத்தைப் பூ

05) வீட்டுத்தோட்டத்தில் உள்ள பயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பிராணி எது?

1. தேனீ 2. செண்பகம் 3. நத்தை 4. தேன்குருவி

06) நாக்கை வெளியில் நீட்டி உணவைப் பெற்றுக்கொள்ளும் பிராணி எது?

1. முயல் 2. தவளை 3. ஆடு 4. மாடு

07) மோப்பம் பிடிக்கும் தன்மை, கூர்மையான கேட்கும் திறன் உடைய பிராணி எது?

1. புலி 2. குரங்கு 3. நாய் 4. யானை

08) கொள்ளை நோயைப் பரப்பும் பிராணி எது?

1. நுளம்பு 2. எலி 3. பூனை 4. ஈ

09) தரையில் உள்ள பல்வேறு கழிவுப் பொருட்களை சிறுசிறு துண்டுகளாக்கி உக்குவதற்கு உதவும் பிராணி எது?

1. காகம் 2. கறையான் 3. அட்டை 4. அணில்

10) பாம்பு கடித்த ஒருவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாகச் செய்ய வேண்டிய மிகப் பொருத்தமான செயல் எது?

1. பாம்பைப் பிடித்துப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.
2. கடித்த இடத்திற்கு சிறிது மேலே ஒரு துணியினால் கட்டி விடுதல்.
3. கடித்த இடத்தில் உகந்த மருந்தைப் பூசுதல்.
4. பருகுவதற்கு உகந்த பானத்தைக் கொடுத்தல்.

11) வீடுகளில் தனிப்பட்ட ஒருவரால் பயன்படுத்தப்படும் பாவனைப்பொருள் எது?

1. தொலைக்காட்சி 2. கைக்குட்டை
3. தொலைபேசி 4. மின்னழுத்தி

12) சரியான கொண்ணிலையில் நடக்கும் ஒருவரின் பாதணியின் எந்தப்பகுதி அதிகளவு தேய்ந்திருக்கும்?

1. பாதணியின் முன்பகுதி
2. பாதணியின் அடியின் பிற்பகுதி சமச்சீராக தேய்வடைதல்
3. பாதணிகளின் அடிப் பக்கவாட்டில் தேய்வடைதல்
4. பாதணி அடி ஒரு பக்கமாகத் தேய்வடைதல்

13) இலங்கை இந்தியாவுக்கு எத்திசையில் அமைந்துள்ளது?

1. வடக்கு 2. மேற்கு 3. தெற்கு 4. கிழக்கு

14) அரச இலச்சினையில் உள்ள நிறைகுடம் வெளிப்படுத்துவது?

1. தார்மீகம் 2. தன்னிறைவு
3. சௌபாக்கியம் 4. உலக நிலைப்பாடு





15)  மஞ்சள் நிறப் பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞை எதனைக் குறிப்பிடுகின்றது?

1. முன்னால் பாதசாரிக்கடவை
2. முன்னால் சிறுவர் கடக்கும் பாதை
3. முன்னால் பாதுகாப்பான புகையிரதக்கடவை
4. முன்னால் பாதுகாப்பில்லாத புகையிரதக்கடவை

16) மகாவலி கங்கை கடலுடன் சங்கமமாகும் இடம்.

1. மாத்தளை 2. களுத்துறை
3. கொட்டியாரக்குடா 4. கொழும்பு

17) உலர் மின்கலங்கள் இரண்டும் மின்குமிழ் ஒன்றும் வயர் துண்டுகள் மூன்றும் கீழே உள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ளவாறு தொடுக்கப்பட்டுள்ளன. ஒளிரும் மின்குமிழைக் கொண்ட உரு எது?



18) அணிந்திருக்கும் உடையில் தீப்பிடித்திருக்கும் ஒருவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாக எடுக்கப்படவேண்டிய மிகப் பொருத்தமான நடவடிக்கை எது?

1. வைத்தியரிடம் கொண்டு செல்லுதல்
2. உடையின் தீப்பிடித்த பகுதியைக் கிழித்தெறிதல்
3. நிலத்தில் உருளச் செய்தல்
4. மெல்லிய துணியால் போர்த்துதல்

19) உடலை நோய்களிலிருந்து பாதுகாக்கும் உணவு எது?

1. வல்லாரை 2. நெய் 3. சோறு 4. மீன்

20) உடலுக்குத் தேவையான சக்தியை வழங்கும் போசனைச்சத்து எது?

1. கனியுப்புக்கள் 2. காபோவைதரேற்று
3. நார்ப்பொருட்கள் 4. விற்றமின்

21) போமலினில் இடப்பட்ட மீனை உண்பதால் ஏற்படும் விளைவுக்கான நோய் அறிகுறி;

1. வயிற்றுவலி உண்டாதல் 2. வாந்திபேதி ஏற்படல்
3. உதடுகள் வீங்குதல் 4. சொறிவு ஏற்படல்

22) மிக விரைவாக ஆவியாகி இழக்கப்படும் திரவம் எது?

1. தேங்காய் எண்ணெய் 2. ஸ்பிரிட்
3. நீர் 4. மரக்கறி எண்ணெய்

**மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்**

### பகுதி II விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 275ml | 7. | 5 | |
| 2. | 3 மணித்தியாலங்கள் | 8. | I | - 132 பிள்ளைகள் |
| 3. | 958 பயணிகள் | | II | - 307 |
| 4. | 75cm | | III | - 15 |
| 5. | ரூபா 145.00 | | IV | - பெட்மின்டன் |
| 6. | ரூபா 45.00 | | V | - வொலிபோல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டி சொன்ன கதை

கதை, ஓவியம்: சதாசிவம் சிவகுமார்

## பூதத்தை விரட்டிய சிறுவன்

அங்கம் - 05




தொடரும்

வாரந்தோறும்
சைக்கிள்களை
வெல்லத் தயாராகுங்கள்

விபரங்கள் விரைவில்...

## விஜய் மாணவர் கழகம்


அங். இல: 4832
ஆ.தனுசயன், உடையார் வீதி, கல்முனை-02.


அங். இல: 4833
இ.தர்மிகா, கல்லூரி வீதி, இளவாலை.


அங். இல: 4834
தே.ரொபினா, கல்லுள்ள, மடுல்சீமை.


அங். இல: 4835
எம்.சப்றான், பி.சி.சி.வீதி, பொத்துவில்.


அங். இல: 4836
எஃப்.சௌமினா, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி.


அங். இல: 4837
எஃப்.அஹ்னா, கச்சக்கொடித்தீவு, கிண்ணியா-05.


அங். இல: 4838
ர.யூட் அமல்ராஜ், செபஸ்தியார் கோவில் வீதி, வெளிக்குளம்.


அங். இல: 4839
எஸ்.ஆன் மஹிஷா, வட்டாரபல வீதி, கல்கிசை.


அங். இல: 4840
எஃப்.ரஸ்னா, தொம்பே ரோட், மல்வானை.


அங். இல: 4841
அ.லீனஸ் வினிஸ்ரன், சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு.


அங். இல: 4842
தே.பகீரத்தனன், நெளுக்குளம், வவுனியா.


அங். இல: 4843
இ.விதுசன், பிரதான வீதி, பண்டாரவளை.

படத்தை இங்கே ஒட்டவும்



### விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

பாடசாலை: ..............................

வகுப்பு: ..............................

திகதி: ..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 3037

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சட்டத் திருத்தம்

உயர் நீதிமன்றம் மீண்டும் ஆரம்பமாகியது. ஆள்பதி நோர்த் அவர்கள் அதன் தலைவர் ஆனார். பிரித்தானிய அரசு தலைமையின் அனுமதியுடனேயே இப்பதவியை அவர் பெற்றார். இந்த நீதிமன்றச் சபையின் அங்கத்தினர் தொகை மூன்றாகும். ஆறுமாதங்களுக்கொருமுறை இந்த உயர்நீதிமன்றச் சபை ஒன்று கூடியது. ஒல்லாந்தர்களால் கொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட பிரதான விசாரணை மன்றுகள் ஏற்கனவே இயங்கி வந்தன. எனினும், குற்றவியல் வழக்குகள் குறித்து ஒரே ஒரு நீதிமன்றமே இருந்தது. ஒல்லாந்த நீதிபதிகள் தமது சேவையை அவ்வேளையில் நிறுத்தி இருந்தனர். இதனால், யாழ்ப்பாணம் மற்றும் காலியில் இருந்த விசாரணை மன்றங்கள் நீண்டகாலமாக இயங்கவில்லை.

ஒல்லாந்தரின் 'லேண்ட்ராட்ஸ்' எனும் நீதிமன்றங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, மாத்தறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், கற்பிட்டி, சிலாபம், நீர்கொழும்பு மற்றும் களுத்துறை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. இதற்கு தலைவர் ஒருவரும் தோம்பு ஆவணக்காப்பாளர் ஒருவரும் சில முதலியார்களைக் கொண்ட மதிப்பீட்டுச் சபை ஒன்றும் இருந்தது. இதன்மூலம் இந்த நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அக்கால ஆங்கிலேயரின் சமயமாகிய ஆங்கிலத்திருச்சபையின் இலங்கை தூதுவராக கடமையாற்றியதும் ஆள்பதி அவர்களே.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலமாக அனைவரையும் கவர்ந்து வருகின்ற இணைய உலாவியாக Google Chrome உலாவியைக் குறிப்பிட லாம். அதன் எளிமையான தோற்றம், வேகமான செயற்பாடு




# Google Chrome உலாவியில் தமிழில் தட்டச்சு செய்தல்

போன்றவை இதற்கு முதன்மையான காரணங்களாக இருக்கக்கூடும். Chrome உலாவியில் பல உபயோகமுள்ள extensions நாளுக்கு நாள் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதேவேளை, இலகுவில் தமிழ் யுனிகோட் முறையில் தட்டச்சு செய்வதை சாத்தியமாக்கும் நிலையை Chrome browser இல் கொண்டுவர ஒரு extension இருப்பது உங்களுக்குத் தெரியுமா? இந்த extension ஐ நீங்கள் உங்கள் Chrome உலாவியில் நிறுவி, இலகுவில் தமிழில் தட்டச்சு செய்ய முடியும். Tamil Transliteration for Google Chrome என்ற extension ஐ install செய்ய Google Chrome Webstore இற்குச் செல்ல வேண்டும். அதற்கான இணைப்பு http://goo.gl/9t6TM என்பதாகும்.

இந்த extension தொழிற்படும் முறையை விளக்குவதாக அமைந்த வீடியோவும் அந்த இணைப்பில் காணப்படுகின்றது. இனி என்ன தாமதம்? உங்கள் எண்ணங்களை அழகு தமிழில் இலகுவாக இணையத்தில் பகிரலாம். உங்கள் மடல்களை தமிழிலேயே எழுதி இணையத்தில் அனுப்பலாம்.


'Office Package' என்பது அவசியம் ஒரு கணினியில் நிறுவப்பட்டிருக்கும்போது, பல வேலைகளை எம்மால் விரைவாகவும் இலகுவாகவும் செய்துகொள்ள முடியும். இவ்வாறான Office Package கள் அனைத்து கணினி களிலும் நிறுவி வைக்கப்பட்டிருக்குமென நாம் எதிர்பார்க்க முடியாது.

எமது Pen Drive இல் Office Package ஐ நிறுவிக் கொண்டால் நாம் போகும் இடங்களிலெல்லாம் பயன்படுத்தும் கணினியில் Office Package இல் அடங் கும் மென்பொருள்களைச் செயற்படுத்தி, எமக்குத் தேவையான காரியங்களைச் செய்துகொள்ள முடியும்.

Pen Drive இற்குள் Install செய்யக்கூடிய வகையான Office Package ஐ இணைய சேவை நிறுவனம் ஒன்று வழங்குகின்றது. Tiny USB office என்ற பெயர் கொண்டு அது இனங்காணப்படுகின்றது. இந்த Office Package தன்னகம் கொண்டுள்ள மென்பொருள்களாவன:

* Database Creation - with CSVed
* Data Encryption - with DScrypt
* Email Client Software - with NPopUK
* File Compression - with 100 Zipper
* File Sharing - with HFS

# Office Package



* File Transfer - with FTP Wanderer
* Flowchart Creation - with EVE Vector Editor
* MSN Messenger Client - with PixaMSN
* Tree-Style Outliner Software - with Mempad
* PDF Creation - with PDF Producer
* Password Recovery - with XPass
* Secure Deletion - with DSdel
* Spreadsheet Creation - with Spread32
* Text Editing - with TedNotepad
* Word Processing - with Kpad
* Program Launching - with Qsel

Tiny USB office இனை பதிவிறக்கம் செய்யக்கூடிய தளம் http://goo.gl/luQh



கணினி, அன்றாடத் தேவையின் அங்கமாக உருவெடுத்துவிட் டது. ஆனாலும், சிலவேளைகளில் வினைத்திறனாக வேலைகளைச் செய்துவிடக்கூடிய வகையில் உரு வாக்கப்பட்ட கணினிகள், மிக மெது வாக வேலை களைச் செய்து தற்காலிக நினைவகக் கூறுகளை உண்டாக்கி, எமது கணினியின் கொள்ளளவைக் கொள்ளையடிக்கும். எனவே, வாரத்திற்கு ஒருமுறையாவது, நீங்கள் உங்கள் கணி னியில் உங்களுக்குத் தேவையில்லாத இடந்தான். Recycle Bin ஐ எப்போதும் வெற்றிடமாக வைத்திருக்க வேண்டும். உங்கள் கோப்புகளை Delete செய்யும்போது, Recycle Bin இற்குள் போகாமல், நிரந்தரமாக வெளியேற்ற






# கணினியை வினைத்திறனாக மாற்றுவது எப்படி?




எமக்கு சிரமத்தை ஏற்படுத்தலாம்.

இவ்வாறு கணினிகள் மெதுவாக, முரணாக இயங்குவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் முதன்மையானது Spyware, adware போன்றன உங்களை அறியாமலேயே, உங்கள் கணினிக்குள் குடிபுகுந்துள்ள வேண்டாத விருந்தாளிகள்.

இத்தகைய காரணங்களால் மெது வாக, இயங்கும் இத்தகைய கணினி களை, வேகமாகவும் வினைத்திறனா கவும் இயக்கச் செய்வதற்கான மாற்று வழிகள் பற்றி ஆராய்வோம்.

## தேவையில்லாத கோப்புகளை நீக்கிவிடுங்கள்

இது உங்களுக்குச் சிறிய விடயமா கத் தோன்றலாம். ஆனால், தேவை யில்லாத கோப்புகள்(Files) எமது கணினியில் தேங்கியிருக்கும்போது வேறு செய்நிரல்களோடு சேர்ந்து

கோப்புகள் ஏதும் உள்ளதா? எனக் கண்டு நீக்கிவிட வேண்டும். இந்தச் சிறிய காரியம் உங்கள் கணினியின் வினைத்திறனைக் கூட்ட துணைநிற்கும்.

## குப்பைத்தொட்டி காலியாக வேண்டும்

Recycle Bin என்ற வொன்று கணினியில் உள்ளது. நீங்கள் நீக்கி விடும் அத்தனை கோப்புகளும் அங்கே வந்து தங்கிவிடும். இதுவும் கணினியின் கொள்ளளவைக் / கொள்ளையடிக்கும்

shift key உடன் delete key ஐ சேர்த்து அழுத்தலாம். இதுவோர் இலகுவான வழியாகும்.

## தேவையில்லாத செய்நிரல்கள் வேண்டாம்

நமது கணினியில் ஒரு தேவைக்காக ஒரு செய்நிரலை நிறுவியிருப்போம். நிறுவிய நாளில் மட்டுமே அதனைப் பயன்படுத்தி விட்டு, அதன் பக்கமே பின்னர் சென்றிருக்க மாட்டோம். இவ்வாறான செய்நிரல்கள் எமது கணினி இயக்கங்களின் வேகத்தினைக் குறைப்பதில் அதிக பங்கு வகிக்கின்றன. ஆகவே, Control Panel இற்கு சென்று, அங்கு நீங்கள் பாவிக்காத, உங்களுக்குத் தேவையற்ற மென்பொருள்களை உடன டியாக அகற்றிவிடுங்கள். இதன்மூலம் கணினி விரைவாக செயற்படத் தொடங்குவதை நீங்கள் அவதானிக்கலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

18

# கடந்த காலாண்டில் எத்தனை iPadகள் விற்பனையாகின?




அப்பிள் நிறுவனத்தின் சாதனங்கள் மீதான விருப்பம், ஆர்வம், மோகம் என்பன நாளாந்தம் உலகளவில் வளர்ந்துகொண்டே செல்கின்றதெனலாம். புதிய சாதனங்களை அப்பிள் நிறுவனம் வெளியிட, அவை வெளியிடப்பட்டு ஒரு நாளுக்குள்ளேயே, மில்லியன் கணக்கானோர் அதைக் கொள்வனவு செய்யத் தம்மை முன்பதிவு செய்து கொள்கிறார்கள்.

நடந்துமுடிந்த மூன்றாவது காலாண்டில், அப்பிள் நிறுவனம் 14.8 மில்லியன் தொடக்கம் 23 மில்லியன் இற்கும் இடையிலான எண்ணிக்கையில் iPad களை விற்பனை செய்திருக்கலாமென அண்மைய கணக்கெடுப்பொன்று தெரிவிக்கின்றது.

ஆனாலும், இந்தக் கணக்கெடுப்பில், உலகளவில் முன்னணியான புள்ளிவிபரவியல் அறிஞர்கள் பலரும் முரண்படுகிறார்கள். எனினும், அவர்கள் அனைவரும் அனுமானித்துச் சொல்கின்ற அத்தனை எண்ணிக்கைகளையும் பெற்று, அதன் சராசரியைக் கண்டபோது, அப்பிள் நிறுவனமானது, கடந்த காலாண்டில் மாத்திரம் 18.38 மில்லியன் iPad களை விற்பனை செய்திருக்க அதிகபட்ச வாய்ப்புகள் காணப்படுவது தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும், அப்பிள் நிறுவனத்தின் மொத்த லாபத்தின் மூன்றில் இரண்டு பங்கானது, அதன் மிக உன்னதமான iPhone விற்பனையின் மூலமே கிடைக்கப் பெறுகிறது. அதன் ஆறாவது தலைமுறையான iPhone 5 அண்மையில் வெளியிடப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றதை 'நுட்பம்' பகுதியினூடாக நீங்கள் அறிந்திருப்பீர்கள்.






# தொலைக்காட்சியின் அடுத்த தலைமுறை



தொலைக்காட்சியின் அடுத்த தலைமுறையானது 'அல்ட்ரா HD' (ultra HD) என்ற பெயரில் அழைக்கப்படவுள்ளது. இந்தப் புதிய பெயரை, இம்மாதம் (ஒக்டோபர்) 18 ஆம் திகதி நுகர்வோர் இலத்திரனியல் அமையம் வெளியிட்டது.

அதேவேளை, ultra HD என்ற நுட்பத்தின் வரையறைக்குள் வருவதற்கு, தொலைக்காட்சியொன்று தன்னகம் கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச தகைமைகளையும் அந்த அமையம் அறிவித்துள்ளது. அதன்படி, ultra HD தொலைக்காட்சியின் திரை, குறைந்தபட்சம் 8 மில்லியன் பிக்ஸல்களைக் கொண்டிருக்க வேண்டும். அல்லது 3840x2160 பிக்ஸல் திரையளவைக் கொண்டிருக்க வேண்டும். அத்தோடு, அதன் திரையின் தோற்ற விகிதம் 16:9 என்ற வகையில் காணப்பட வேண்டும்.

இத்தனை விடயங்களையும் அப்படியே கொண்டதாக இவ்வருட இறுதியில், 84 அங்குல திரையளவுள்ள தொலைக்காட்சிகளை LG மற்றும் Sony நிறுவனங்கள் வெளியிடவுள்ளன. Sony வெளியிடவுள்ள தொலைக்காட்சியானது, 'XBR - 84 X900 ultra HDTV' என்ற பெயரில் இனங்காணப்படுகிறது. இந்தத் தொலைக்காட்சியின் விலை சுமார் 25,000 அமெரிக்க டொலர்களாகும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# விஜய் நுட்பம்

தருவது தாரிக் அஸீஸ்

2012, ஒக்டோபர், 31, புதன்கிழமை

# எல்லோருக்குமான Chromebook



Samsung மற்றும் Google ஆகிய நிறுவனங்கள் இரண்டும் ஒன்றிணைந்து சகாய விலையில் கிடைக்கக்கூடிய வாறு புதிய Chromebook ஒன்றினை வெளியிட்டுள்ளன.

இந்த Chromebook ஆனது, கூகிளின் பணிசெயல் முறைமையான Chrome OS கொண்டு இயங்கும் தகவுடையது. OS ஆனது, தொடர்றா நிலையில் (online) பாவிக்கக்கூடிய மிகச் சிறந்த பணிசெயல்முறையாக உருவெடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. அதனோடு, இப்புதிய Chromebook மடிக்கணினியின் விலை 249 அமெரிக்க டொலர்களாகும். 0.8 அங்குல தடிப்புடைய இந்தப் மடிக்கணினி அப்பிள் நிறுவனத்தின் MacBook Air என்ற மிக மெல்லிய மடிக்கணினியைப் போன்று ஓரளவுக்கு காணப்படுகின்றது. இந்தப் புதிய Chrome book ஆனது, Samsung இன் Exynos 5250 என்ற புரோசசரைக் கொண்

புதிய Chromebook ஆனது, 1.13 கிலோகிராம் எடையைக் கொண்டது. 11.6 அங்குல திரையைக் கொண்டுள்ளதோடு, 1366x768 பிக்ஸல்கள் திரையளவு விசாலத்தைக் கொண்டிருக்கின்றது. இதன் தோற்றம் அப்பிள் டுள்ளது. அத்தோடு, இதன் நினைவக அளவு 2GB ஆகும். சேமிப்புக் கொள்ளளவு 16 GB ஆகக் காணப்படுகின்றது. கூகிளின் Google Drive என்ற சேமிப்புச் சேவையிலிருந்து 100 GB கொள்ளளவை, Chromebook பயனருக்காக இரண்டு வருடங்களுக்கு கூகிள் மடிக்கணினியோடு இலவசமாக வழங்குகின்றது.

**உங்களுக்குத் தெரியுமா?**

Chromebook மடிக்கணினியானது, 10 செக்கன்களுக்குள் on ஆகிவிடும். அதனால், விரைவாகக் கருமமாற்றத் தொடங்கிவிடலாம்.

# இணையத்தில் சில வேலைகளை இலகுவாகச் செய்திட....



Chrome

பிரதான இணைய உலாவிகள் யாவற்றிலும் ஒரே வகையான நியமமான சுருக்க வழிகள் காணப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்தி வெகு விரைவாக காரியங்களைச் செய்யலாம்.

★ Alt+D ஆகிய keys களை ஒருமிக்க அழுத்துவதன் மூலம் Address bar இல் வெகு விரைவாக உங்களுக்குத் தேவையான முகவரியை type செய்து, குறித்த இணையத்தளத்திற்கு விரைவாகச் செல்வதற்கான வழியை உண்டாக்கலாம்.

★ Ctrl key ஐ அழுத்திய வண்ணம், முறையே +, - ஆகிய keys களை அழுத்துகின்றபோது, திரையில் தோன்றும் இணையப்பக்க எழுத்தின் அளவை முறையே கூட்டிக் குறைக்கலாம்.

★ உலாவியில் இருக்கின்ற பக்கத்திலிருந்து, நீங்கள் முன்னர் இருந்த இணையப் பக்கத்திற்கு பின்னோக்கிச் செல்ல Alt keyஐ அழுத்திய வண்ணம், இடது அம்புக்குறி key ஐ அழுத்தலாம். முன்னோக்கிச் செல்வதாயின் Alt key உடன் வலது அம்புக்குறி key ஐ அழுத்தலாம்.

★ ஓர் இணையப் பக்கத்தை விரைவாக refresh (புதுப்பிக்க) செய்ய F5 key ஐ அழுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(சென்றவாரத் தொடர்ச்சி)

மலேசியாவிற்குத் தெற்காக அமைந்துள்ள சிங்கப்பூரை மலேசியாவிலிருந்து பிரிப்பது 'ஜொஹோர்' நீரிணையாகும்.

இப்பெருந்தீவின் அகலம் கிழக்கு மேற்காக சுமார் 43 கிலோ மீற்றர்களாகும். அதன் நீளம் வடக்குத் தெற்காக 23 கிலோ மீற்றர்களாகவும் காணப்பட்டது.1960 இல் 581.5 சதுர கிலோ மீற்றர் மொத்த நிலப் பரப்பைக் கொண்டிருந்த சிங்கப்பூர் நாடு தற்போது 710.2 சதுர கிலோமீற்றர்களாக இருக்கின்றது. எதிர்காலத்தில் இது மேலும் அதிகரிக்கப்படலாம் என்றும் நம்பப்படுகின்றது. இதற்குக் காரணம், 'ஜுராங்' போன்ற தீவுகள் நில மீள்புனரமைப்புத் திட்டத்தின்கீழ் விஸ்தரிக்கப்பட்டு வளமாக்கப்படுவதாகும். பெருந்தீவின் மத்தியில் 166 மீற்றர்கள் வரை உயரமான சிகரங்கள் காணப்படுகின்றன. இவற்றில் உயர்ந்தது 'புகிட் டிமாஸ்' ஆகும்.

சிங்கப்பூர் பூமத்திய ரேகைக்கு வடக்கே 137 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருப்பதால், இது வெப்பமான காலநிலையைக் கொண்டுள்ளது. இதன் வெப்பநிலை 22°c முதல் 34 °c வரை மாறிச்செல்கின்றது. வருடத்தில் டிசம்பர் முதல் மார்ச் வரையான காலப்பகுதி சிங்கப்பூரின் மழைவீழ்ச்சிக் காலமாகும். இரவு நேரத்தில் 'நைட் சபாரி' சென்றபோது, மழை தூறிக்கொண்டிருந்தது. புவியியலாளர்களின் காலநிலைப் பாகுபாட்டின் அடிப்படையில் சிங்கப்பூர் அயனமண்டல மழைக்காட்டு காலநிலைக்குட்பட்டதாகும். சிங்கப்பூரின் சராசரி ஈரத்தன்மையானது, காலைவேளைகளில் 90 வீதமாகவும் இரவில் 60 வீதமாகவும் காணப்படுகின்றது.

தோமஸ் ஸ்டாம்போர்ட் ரப்ல்ஸ் தூரதிருஷ்டியுடன் செயற்பட்டு இத்தீவை நவீன நகராக மாற்றியமைப்பதற்கான முதல் முக்கிய காரணகர்த்தாவாகக் கருதப்படுகின்றார்

13 ஆம் நூற்றாண்டளவில் ஸங் நிலாஉதாமா என்ற இளவரசன் இத்தீவிற்குள் கால்பதித்தபோது, சிங்கத்தை ஒத்த ஒருவகை மிருகத்தை எதிர்கொள்ள நேர்ந்தமையால், அவ்விடத்தை 'சிங்கபுர' என்று அழைத்ததாக மலேய மரபுக்கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கபுர என்ற சமஸ்கிருத மொழியின் பொருள் 'சிங்க நகரம்' என்பதாகும்.

இத்தீவில் 'தெமாசெக்' என்ற பெயரில் நகரொன்று இருந்ததாகவும் சீனப் புராணங்களிலும், மலேசியா மரபுக் கதைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. 'தெமாசெக்' என்றால் 'கடற்பட்டணம்' அல்லது கடல் சார்ந்த நகரம் என்பது பொருளாகும்.

சிங்கப்பூரின் நவீன வரலாறு 1819 ஜனவரி 29 ஆம் திகதி சேர் தோமஸ் ஸ்டாம்போர்ட் ரப்ல்ஸ் (Thomas Stamford Raffles) என்ற ஆங்கிலேயர் இத்தீவை ஜொஹோர் சுல்தானிடமிருந்து பொறுப்பேற்றுக்கொண்டதுடன் ஆரம்பமாகின்றது. தோமஸ் ஸ்டாம்போர்ட் ரப்ல்ஸ் தூரதிருஷ்டியுடன் செயற்பட்டு இத்தீவை நவீன நகராக மாற்றியமைப்பதற்கான முதல் முக்கிய காரணகர்த்தாவாகக் கருதப்படுகின்றார். வனாந்தரமாகவும், சேறும் சகதியுமாகக் காணப்பட்ட மீன்பிடிக் கிராமம் சுதந்திர வர்த்தக வலயமாக மாற்றம் பெறுவதற்கு இவர்தான் முன்னோடியானார். அதனால்தான் இவர் சிங்கப்பூரின் 'சிருஷ்டிகர்த்தா' என மதிக்கப்படுகின்றார். தோமஸ் வூல்னர் (Thomas Woolner) என்பவரால் வெண்கலத்தில் உருவாக்கப்பட்ட அவரது சிலை விக்டோரியா தியேட்டருக்கு அருகில் நிறுவப்பட்டுள்ளது.



கிழக்கிந்தியக் கம்பனியின் வசமிருந்த சிங்கப்பூர் 1858 இல் பிரித்தானியர் வசமாகியதும், துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு, கிழக்கு-மேற்கு வர்த்தகத்தின் முக்கிய கப்பல் போக்குவரத்து மையமாகியது. 1869 இல் சுயெஸ் கால்வாய் திறக்கப்பட்டதும், கப்பல் போக்குவரத்தின் அதிகரிப்பானது, சிங்கப்பூர் சுதந்திர வர்த்தகத்துறையின் அபிவிருத்திக்கு வழிவகுத்ததெனலாம்.



## ஆங்கிலேயரின் பாதுகாப்பு அரண்

1819 முதல் பிரித்தானியா சிங்கப்பூரில் இராணுவக் கடற்படைத் தளங்களை அமைத்துக்கொள்ளத் தலைப்பட்டதுடன், தனது கிழக்கத்திய சாம்ராஜ்யத்தின் பாதுகாப்பு அரணாகவும் இத்தீவை ஆக்கிக்கொண்டது. இவ்வாறான இராணுவத்தளங்கள் இரண்டாம் உலகப்போரின்போது, ஜப்பானியப் படைகளால் முற்றுகையிடப்பட்டன. இறுதியில் 1942 பெப்ரவரி 15 ஆம் திகதி ஜப்பானியத் தளபதி யமாசிதா தொமொயூகி என்பவர் சிங்கப்பூரைக் கைப்பற்றியபோதிலும், வீறுகொண்ட கூட்டுப்படைகளின் கடுந் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல், உலகப்போரில் ஜப்பான் தோல்வியுற்று மீண்டும் சிங்கப்பூர் பிரித்தானியர் வசமாகியது. அதன் பின்னர் 1946 இல் சிங்கப்பூர் தனித்துவமிக்க முடிக்குரிய காலனியாகியது.

(தொடரும்)

# 2012, தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



கன்னத்தோட்டை சுலைமானியா ம.கல்லூரியைச் சேர்ந்த எம்.மும்தாஸ், 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சவ்முன்னிஸா தம்பதியரின் புதல்வியாவார்.



மாறை/வெலிபிட்டிய ஸாஹிரா ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த எஃப்.சி.ஸைனப், 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர்,பௌஸுல் கரீம்-பாத்திமா பரினா தம்பதியரின் புதல்வியாவார்.



கல்முனை உவெஸ்லி உ.த.பாடசாலையைச் சேர்ந்த ஆ.ஹரிசயன், 176 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஆனந்த பிரபாகரன்-நந்தினி தம்பதியரின் புதல்வராவார்.



மாறை/ஸாஹிரா ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த எஃப். பத்ரா, 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.பாயிக்-ராஸியா தம்பதியரின் புதல்வியாவார்.



வெலிமடை மு.ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆ. கவேந்திரணி, 161 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஆனந்தகுமார்- சரோஜினி தம்பதியரின் புதல்வியாவார்.



மாறை/ஸாஹிரா ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த என்.சிப்னா பர்வின், 167 புள்ளிகள்ளைப் பெற்றுள்ளார். இவர், எம்.மும்தாஸ் - சிபா தம்பதியரின் புதல்வியாவார்.



க/அரபா மு.வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜே.ஆகில் ஜௌஃபர் 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஜௌஃபர் தம்பதியரின் புதல்வராவார்.



மாறை/வெலிபிட்டிய ஸாஹிரா ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.அம்ரா ஸைனப், 161 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.மதாஹிம் - நலூபா தம்பதியரின் புதல்வியாவார்.



யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.தேவசுதன், 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சுப்பிரமணியம் தம்பதியரின் புதல்வராவார்.



கண்டி பெண்கள் உ/த பாடசாலையைச் சேர்ந்த ஏ.பாத்திமா செளமினா, 173 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

## நீங்களும் அனுப்பலாம்!

2012, தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் தனியாகவோ, குழுவாகவோ எடுத்துக்கொண்ட படங்களை உரிய அத்தாட்சியுடன் அனுப்பவும்.

முகவரி:

புலமைப்பரிசில்,
'விஜய்'
த.பெ.எண். 2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் அக்கா-தம்பி-கமல் ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**අක්කා: ඉතින් මල්ලි, කොහොමද සැප සනීප?**
இதின் மல்லி, கொஹொமத செப சனீப?
அக்கா: **இனி தம்பி, எப்படி சுகம்?**

**කමල්: හොඳයි අක්කේ.**
ஹொந்தய் அக்கே.
கமல்: **நல்லம் அக்கா.**

**අක්කා: විභාගය හොඳට කළාද මල්ලි?**
விபாகய ஹொந்தட்ட களாத மல்லி?
அக்கா: **பரீட்சையை நன்றாகச் செய்தீர்களா தம்பி?**

**කමල්: ඔව් අක්කේ, මම පන්තියේ පළවෙනියා.**
ஒவ் அக்கே, மம பந்தியே பளவெனியா.
கமல்: **ஆம் அக்கா, நான் வகுப்பில் முதலாம் பிள்ளை.**

**තාත්තා මට බයිසිකලයක් අරන් දුන්නා.**
தாத்தா மட்ட பய்சிகலயக் அறன் துன்னா.
**அப்பா எனக்கு சைக்கிளொன்று வாங்கித் தந்தார்.**

**මල්ලි: අයියා, ඒක ගෙනාවා නම් අපට ඒක පදින්න තිබුණා.**
அய்யா, ஏக கெனாவா நம் அபட்ட ஏக்க பதின்ன திபுணா.
தம்பி: **அண்ணா, அதைக் கொண்டுவந்திருந்தால் எங்களுக்கு அதை மிதித்திருக்கலாம்.**

**කමල්: ලබන සතියේ අපේ ගෙදර යමු මල්ලි. එතකොට බයිසිකලය පදින්න පුළුවන්.**
லபன சதியே அபே கெதற யமு மல்லி. எதகொட்ட பய்சிகலய பதின்ன புலுவன்.
கமல்: **வார கிழமை எங்கள் வீட்டுக்குப் போவோம் தம்பி. அப்போது சைக்கிள் மிதிக்கலாம்.**

**මල්ලි: ආ.. ඒක හොඳයි. මමත් සතියක් ඔයාලගේ ගෙදර ඉන්නවා.**
ஆ.... ஏக ஹொந்தய். மமத் சதியக் ஒயாலகே கெதற இன்னவா.
தம்பி: **ஆ... அது நல்லது. நானும் ஒரு கிழமை உங்கள் வீட்டில் இருப்பேன்.**

**අක්කා: මල්ලි එන්න, ඇඳුම් මාරු කරගෙන තේ බොන්න යමු.**
மல்லி என்ன, எந்தும் மாறு கறகென தே பொன்ன யமு.
அக்கா: **தம்பி வாருங்கள், உடைகளை மாற்றிக்கொண்டு தேநீர் அருந்தச் செல்வோம்.**

**කමල්: හොඳයි අක්කේ.**
ஹொந்தய் அக்கே.
கமல்: **நல்லது அக்கா.**

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. தம்பி, எப்படி சுகம்?
..............................................................

ii. பரீட்சையை நன்றாகச் செய்தீர்களா?
..............................................................

iii. எங்கள் வீட்டுக்குப் போவோம்.
..............................................................






**Have** அல்லது **Has** எனும் துணை வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப்பட்ட 'உடன்பாடு நிலை' வாக்கியங்களை, 'வினா நிலை' வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறை பற்றி இங்கே அவதானிப்போம்.

**குறிப்பு:** Have அல்லது Has எனும் துணை வினைச்சொல், ஒரு வாக்கியத்தின் தொடக்கத்தில் அதாவது, முன்னிலையில் இடம்பெறுகின்றபோது, அவ்வாக்கியம் 'வினா நிலை' வாக்கியமாக அமைந்துவிடுகின்றது. உதாரணங்கள் மூலம் அவற்றை இங்கே பயில்வோம்.

(அ) உன்னிடம் ஒரு கைத்தொலைபேசி உண்டு.
You have a hand phone.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) உன்னிடம் ஒரு கைத்தொலைபேசி உண்டா?
Have you a hand-phone?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

**மேலும் ஒரு விளக்கம்:** Have அல்லது Has எனும் துணை வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப்படுகின்ற 'உடன்பாடு நிலை' வாக்கியத்தை, 'வினா நிலை' வாக்கியமாக மாற்றியமைக்கின்றபோது, அவ்வினா வாக்கியத்தில் 'got' எனும் வினைச்சொல், மேலதிகமாகச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது ஆங்கில மொழி இலக்கண மரபாகும். ஆகவே, அவ்வினாவாக்கியம் பின்வருமாறு அமைகின்றது.

(இ) Have you got a hand-phone?
உன்னிடம் ஒரு கைத்தொலைபேசி உண்டா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

**குறிப்பு:** இத்தகைய வினா வாக்கியங்களில், 'got' என்பதற்குத் தனியான அர்த்தம் பெறப்படுவதில்லை.

* இந்த வினா வாக்கியத்தை வேறோர் இலக்கண ரீதியாக, பின்வருமாறும் அமைக்கலாம்.

(ஈ) Do you have a hand-phone?
உன்னிடம் ஒரு கைத்தொலைபேசி உண்டா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(உ) உன்னிடம் ஒரு காசுப்பை உண்டு.
You have a purse.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) உன்னிடம் ஒரு காசுப்பை உண்டா?
Have you got a purse?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)
* Do you have a purse?

(எ) அவர்களிடம் ஒரு கார் உண்டு.
They have a car.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஏ) அவர்களிடம் ஒரு கார் உண்டா?
Have they got a car?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)
* Do they have a car?

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ...... "மகன் இந்தப் பக்கம் வாருங்கள். அந்த நாயுடன் விளையாட வேண்டாம்".
அம்மா சத்தம் போட்டார். அம்மாவின் சத்தத்தினைக் கேட்டு நானும் பயந்துவிட்டேன். "ஐயோ அம்மா...... இங்கே பாருங்கள் இந்த நாய் மிகவும் சுட்டித்தனமாக உள்ளது".
"வேண்டாம் மகன் தடுப்பூசி போட்டிருக்கோ தெரியாது.
அதனுடன் விளையாடி நோயைத் தேடிக்கொள். அப்பொழுது தெரியும் விபரீதம்" என்றார் அம்மா.
நான் நாய்க்குட்டியை வெளியே விரட்டி விட்டு வீட்டினுள் வந்தேன்.
ஆனால் என் மனதுக்குள் ஒரு கேள்வி மட்டுமே எஞ்சியிருந்தது. "விசர்நாய்க்கடி நோய் என்றால் என்ன?" என்பதே அந்தக் கேள்வி.




### விசர்நாய்க்கடி நோய் என்றால் என்ன?

இது ஒருவகை வைரஸினால் தொற்றும் நோயாகும். இந்த வைரஸ் றெப்டோ (Rhabdo) குடும்பத்தினைச் சேர்ந்த RNA வைரஸாகும். இந்த வைரஸ் உடலுக்குள் சென்றதும் நரம்புத் தொகுதியை மிக மோசமாகப் பாதிக்கும். நோய் ஏற்படும் பட்சத்தில் உரிய சிகிச்சை வழிமுறைகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

### விலங்குகளினால் ஏற்படும் நோய்

விசர்நாய்க்கடி எனப்படும் இந்த நோய் நேரடியாக மனிதர்களுக்கு ஏற்படுவதில்லை. முதலில் விலங்குகளுக்கே இந்த நோய் ஏற்படுகின்றது. சூழலில் நிலவும் வெப்பநிலைக்கு ஏற்ப உடல் வெப்பநிலையை மாற்றிக்கொள்ளாத விலங்குகளுக்கு இந்த நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம். இவற்றில் நாய், பூனை, கீரி, குரங்கு, எருமை, ஆடு, நரி, பெருச்சாளி என்பன இந்த நோய் ஏற்படும் அபாயம் கொண்ட விலங்குகளாகும்.

# விசர்நாய்க்கடி நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்




### மனிதர்களுக்கு எவ்வாறு ஏற்படுகின்றது?

விலங்குகளுக்கு ஏற்படும் இந்த நோய் ஆரோக்கியமான மனிதர்களுக்கு ஏற்படக் காரணம், விசர் நோய் கொண்ட விலங்குகள் ஆரோக்கியமான மனிதர்களைக் கடிப்பதனாலேயாகும். இந்த விசர்நாய்க்கடி வைரஸ்கள் பாதிக்கப்பட்ட விலங்குகளின் பால், கண்ணீர், சிறுநீர், பாலியல் சுரப்பிகளில் அடங்கியிருக்கும். விசர்நாய்க்கடி நோய் உள்ள விலங்கு கடிப்பதனூடாகவும், மனித உடலைக் கீறுவதனூடாகவும் நோய் வைரஸ்கள் உடலுக்குள் சென்றுவிடுகின்றன. முகம், கண், நாசி என்பனவற்றில் நோயுற்ற விலங்கின் எச்சில்கள் படுவதனாலும் நோய் ஏற்படக்கூடும். எனினும், அவற்றின் எச்சில் சிறுநீர் என்பனவற்றை மிதிப்பதனூடாக நோய்க்காவிகள் உடலுக்குள் செல்லமாட்டாது.

### வைரஸின் செயற்பாடுகள்

றெப்டோ வைரஸ் உடலுக்குள் புகுந்தவுடன் முதலில் தசைநார்ப் பகுதிகளிலேயே வளர்ச்சியடைகின்றன. அதன்பின் நரம்புகளுக்குள் சென்று மூளைக்குள் சென்றுவிடுகின்றன. நரம்புக் கலங்களினுள் வைரஸ் வளர்ச்சியடைவதன்மூலம் நோயாளியைக் குணப்படுத்த முடியாத நிலை காணப்படும். நோய் அறிகுறிகள் ஏற்பட்டு சில நாட்களின் பின்னர் நோயாளி மரணிக்கக்கூடும். இது மனிதர்களுக்கு மட்டுமன்றி; விலங்குகளுக்கும் பொது இயல்பாகும்.

### இது எமது கடமையாகும்

செல்லப் பிராணிகளுக்கு உரிய தடுப்பூசிகளை இடுவது சமூகத்திற்காக நாம் ஆற்றும் கடமைகளில் ஒன்றாக அமைகின்றது.

நாய்களைக் கொஞ்சுவதையும், ஆத்திரமூட்டுவதையும் தவிர்த்துக்கொள்ளுங்கள். வீடுகளில் கடிக்கும் அபாயம் கொண்ட நாய்கள் இருக்குமாயின், அவற்றை கூடுகளில் இட்டு அல்லது கட்டி வைத்துக்கொள்ளுங்கள்.

கடிக்கும் நாய்களின் வாயைக் கட்டி வையுங்கள்.

### நோய்த்தடுப்பு

இந்நோய் ஏற்படுவதனைத் தடுப்பதே ஒரே வழிமுறையாகும். இதனால், வீதிகளில் அல்லது வீடுகளில் காணப்படும் நாய்கள் கடித்தால் இயலுமானவரை விரைவில் சிகிச்சை பெற வேண்டும்.

### இத்தகைய விலங்குகள் கடித்தால்

காயத்தை சுத்தமான நீரினால் நன்கு சவர்க்காரம் இட்டு 10 நிமிடங்கள் வரை கழுவிக் கொள்ள வேண்டும்.

காயத்திலிருந்து குருதி வடிவது நிற்காவிடின், சுத்தமான துணியினால் காயத்திற்கு கட்டுப் போடுதல் வேண்டும். துரிதமாக மருத்துவரை நாடுவதுடன், சந்தேகத்துக்குரிய விலங்கு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

### நோய் அறிகுறிகள்

இந்த வைரஸ் உடலுக்குள் சென்று நோய் அறிகுறியினை வெளிப்படுத்தும் காலப்பகுதி சில வேளைகளில் ஒரு வாரத்திற்குக் குறைவாகவும் இருக்கலாம். அல்லது ஒரு வருடத்திற்கு அதிகமாகவும் இருக்கலாம். காய்ச்சல், களைப்பு, ஒலி, ஒளி, குளிர், கடும் காற்று என்பனவற்றை தாங்கிக் கொள்ளும் சக்தி இன்மை.

### சுவாச வேகம் அதிகரிப்பு

நோயாளிக்கு அதிக அச்சம், கோபம், மனக்குழப்பம் ஏற்படுதல், தொண்டையில் தசைநார்கள் இறுகுவதனால் நீர் அருந்த, எச்சில் விழுங்க முடியாமை, வாயில் இருந்து எச்சில் வடிதல்.

### விசர்நாய்க்கடியின் இரண்டு வகைகள்

நோய்க்குரிய வைரஸ் நாயின் உடலுக்குள் சென்றவுடன், வெளிக்காட்டும் நோய் அறிகுறிகளுக்கு ஏற்ப நோயின் இயல்பு இரண்டு வகைப்படுத்தப்படும். அதாவது, வெளிப்படும் விசர் மற்றது வெளிப்படா விசர்.

### வெளிப்படும் விசர்


இதன்போது, நாய் வெறிபிடித்தது போன்று செயற்படும். இதன் கண்கள் சிவப்பாக இருக்கும். வாயிலிருந்து சளியும், இரத்தமும் வடிந்து கொண்டிருக்கும்.


### வெளிப்படா விசர்

இதன்போது, விசர்நாயானது கடிக்காது, குழப்பமடையாது. இருண்ட இடத்தில் சுருண்டு படுத்திருக்கும். உணவு உண்பதனைத் தவிர்த்துவிடும். இந்த வைரஸினால் பாதிக்கப்படும் ஏனைய விலங்குகளுக்கும் இது பொருந்தும். இந்நோய் மனிதனுக்குத் தொற்றினால் மரணம் நிச்சயம்.

### நாய்க்கு வழங்கப்படும் தடுப்பூசி

நாய்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசியினை Anti Rabies Vaccination (ARV) என்பர். இந்த தடுப்பூசியினை நாய்க்கு 6 வாரங்கள் பூர்த்தியாகும் போதும், அதன்பின் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையும் வழங்க வேண்டும். இதனால், விசர்நாய்க்கடி நோய் ஏற்படாமல் தடுக்கப்படுகின்றது. தடுப்பூசி வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குள் நாய் கடித்தால் ஆபத்து ஏதும் இல்லை. இரண்டு ஆண்டுகளின் பின் நாய் கடித்தால் மீண்டும் நோய் ஏற்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A. கடல் ஆமைக்கு அதன் நண்பர்களை சந்திக்க வழிகாட்டுங்கள் — 1



### B. ஒத்தகருத்துச் சொல் தருக

1. மலர் - ..........................
2. உறக்கம் - ..........................
3. ஆபரணம் - ..........................
4. வீடு - ..........................
5. சுவை - ..........................
6. ஒளி - ..........................
7. உணவு - ..........................
8. தாரகை - ..........................

## குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைத்து எழுதுக — 2


r g o f


a n p


c r b a


f l a e


k o b l c






தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2012.11.07 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 389
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## எத்தனை உள்ளன? — 3



## பொருத்தமான படத்துடன் இணைக்க — 4

bed 

jar 

book 


chair 

## காலங்களுக்கேற்ப இடைவெளிகளை நிரப்புக — 5

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. நான் | வந்தேன் | .......................... | .......................... |
| 2. மரங்கள் | .......................... | விழுகின்றன | .......................... |
| 3. கணேஷ் | .......................... | படிக்கின்றான் | .......................... |
| 4. சேவல்கள் | .......................... | .......................... | கூவும் |

## அறிவுக்கு விருந்து - 386 விடைகள்


**போட்டி: 01**



**போட்டி: 02**




**போட்டி: 03**




**போட்டி: 04**

1. சிங்கம் ஊன் உண்ணியாகும்.
2. தவளையின் இளையது பேத்தை எனப்படும்.
3. அம்பு என்பதன் ஒத்தகருத்துச் சொல் பாணம் ஆகும்.
4. தேவகி குளிர்பானம் அருந்தினாள்.
5. பனையின் இளையதைக் குறிக்கும் சொல் வடலி என்பதாகும்.

**போட்டி: 05**

1. ரி
2. பசும்பால்
3. முற்காலம்
4. கண்
5. உறுதிணை

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 386 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
அப்துல் மலிக், கலல்பிடிய வீதி, உக்குவளை.

**போட்டி: 02**
எவான் புளோரியன், பற்றிமாகிரி வீதி, தாண்டவன்வெளி.

**போட்டி: 03**
எடின் டிலுக்சன், கன்னியா வீதி, திருகோணமலை.

**போட்டி: 04**
ஹப்ஸா ஹபீல்டீன், கண்டி வீதி, வெலம்பொட.

**போட்டி: 05**
ரீஹா நஸ்மி, யோனகபுர, திக்குவல்லை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- எஃப்.மூன்தஹா, வெலிப்பென்னை.
- எஃப்.ஷப்லா, தும்மலதெனிய.
- எஸ்.ராஷித், கொடம்பிடிய.
- இ.கோபிகிருஷ்ணன், திருகோணமலை.
- பிரவீன்குமார், தெஹியோவிட்ட.
- என்.சுஹைர், கலேவள.
- ர.இலட்சியா, கொழும்பு-1
- தே.ரவிபிரகாஷ், இரத்தினபுரி.
- எம்.ஷப்ராஸ், லபுகொடுவ.
- எம்.முஹர்ரிம், கல்பிட்டி.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.05

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | |
| 5 | | | 6 | | 7 |
| | | | | | |
| 8 | | 9 | | 10 | |
| | | | | | |
| 11 | | | | 12 | |

**மேலிருந்து கீழ்**

01. கேள்விக்கு இது கிடைக்கும்.
02. குழந்தையின் சிரிப்பில் இது இராது.
03. புலவர் இயற்றுவது.
07. வீட்டில் உள்ளது. (தலைகீழ்)
08. பாடுபவள்.
09. இதில் பாம்பு குடிகொள்ளும்.
10. இந்த நேரத்தில் உறங்கல் ஆகாது. (தலைகீழ்)

**இடமிருந்து வலம்**

01. விகடமாகப் பேசுபவர்.
05. 'ஆக்கு' எனலாம். (மாறியுள்ளது)
06. நாம் செய்ததற்கு இது கிட்டும் என்பர்.
08. இதைக் கண்டால் படையே நடுங்கும்.
10. படி. (மாறியுள்ளது)
11. இதில் நீர் பெறலாம்.
12. இது வந்தால் பத்தும் பறக்கும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.04 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கு | 2 டி | | 3 வா | சு | 4 கி |
| 5 க | த | 6 வு | | | ளை |
| ன் | | 7 னை | ன் | 8 செ | |
| | 9 சி | றி | | க் | |
| 10 பொ | றி | | 11 டி | கு | 12 ம |
| | 13 து | ற | வி | | தி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தீ மூட்டும் வகைகள்





முக்காலித் தீ -Tripod Fire




நட்சத்திரத் தீ -Star Fire



மறுதலிப்புத் தீ -Reflector Fire




பாதுகாப்பான பள்ளத்தாக்குத் தீ
Trench Fire



பாலத் தீ -Lumberman's Fire




பிரதித் தீ - Alter Fire



வேட்டைக்காரன் தீ -Thunder's Fire



நாடோடித் தீ/ வண்டிக்காரன் தீ
Nomad Fire



தூக்குத் தீ -Crane Fire

தயாரிப்பு: சாரணர் ஜெரம் ப. சில்வா

## விஜய் சாரணர் உலகம்


## குருளைச் சாரணப் பெண்கள்



### சிந்திக்க சில வினாடிகள்

டொம் (Tom) தனது அவதானக் குறைவால் கூடாரக் கயிற்றில் தடுக்கி விழுகின்றான்






**அன்பு சாரணர்களே,**

நீங்களும் உங்கள் பிரதேசத்துடன் தொடர்புடைய சாரணர் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புகைப்படங்கள், செய்திகள், ஆக்கங்கள் ஆகியனவற்றை எமக்கு அனுப்பி வைக்கலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
சாரணர் உலகம்,
'விஜய்'
த.பெ.எண் - 2037 கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடையின் ஆரம்பம்

வெயிலுக்கா அல்லது மழைக்கா குடை உருவாக்கப்பட்டது? என்று கேட்டால் என்ன பதில் கூறுவீர்கள்? வெயிலுக்காகவே குடை உருவாக்கப்பட்டது என்பதே உண்மையானதாகும். அந்தவகையில், 11 ஆம் நூற்றாண்டில் சீன நாட்டவர் ஒருவரே முதன்முதலாக குடையை பயன்படுத்தியவராவார். ஆனால், 9 ஆம், 10 ஆம் நூற்றாண்டுகளில் பழங்கால எகிப்தியர்களும் பெபிலோனியர்களும் வெயிலுக்கு நிழல் தருவதற்காக குடையை ஒத்ததான ஒருவகை கவசத்தைப் பயன்படுத்தியிருந்ததாகவும் கூறப்படுகின்றது. ஆனால், இது அவர்களின் பாரம்பரியத்தை உணர்த்தும் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டும் வந்துள்ளது.



ஐரோப்பாவில் கிரேக்க நாட்டவர்களே, முதன்முதலாக வெயிலுக்கு நிழல்தரும் கவசமாக குடையைப் பயன்படுத்தியிருந்தனர். ஆனால், உரோமரனியர்களே மழைக்குப் பிடிப்பதற்கென குடையை முதன்முதலாகப் பயன்படுத்தினர். இருப்பினும், இடைக்காலத்தில் குடையின் பாவனை இல்லாமல் போயிருந்தது. மீண்டும் 16 ஆம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டின் மக்கள் மத்தியிலேயே குடையானது, மீண்டும் பாவனைக்கு வந்தது. தொடர்ந்து 18 ஆம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பா உட்பட, உலகம் பூராகவும் இன்றியமையாத ஒன்றாக குடை ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது.

# குறுக்கெழுத்துப் போட்டியின் ஆரம்பம்

குறுக்கெழுத்துப் போட்டியானது, இன்று அநேகரைக் கவர்ந்த சிறந்தவொரு போட்டியாக உள்ளது. உரிய கேள்விகள், குறிப்புகளுக்கான விடையைக் கண்டுபிடிப்பதில் அலாதி இன்பம் கிடைக்கப்பெறுவதுடன், அறிவுமட்டத்தையும் பெருக்கிக்கொள்ள முடிகின்றது. ஆரம்பகாலங்களில் தற்போதைய முறைகளைப் போன்றில்லாமல் தனித்தனி சதுரக் கட்டங்களைக் கொண்டதாகவே குறுக்கெழுத்துப் போட்டிகள் அமைந்திருந்தன. அதாவது, தனித்தனி சொற்களே இவற்றில் அமையப்பெற்றன. ஆனால், சொற்களுக்கிடையே குறுக்காக பதில் அமையப்பெறும் முறை கையாளப்பட்டிருக்கவில்லை.



முதலாவது குறுக்கெழுத்துப் போட்டியானது, அமெரிக்காவைச் சேர்ந்த ஆத்தர் வின் என்பவரினாலேயே உருவாக்கப் பட்டிருந்தது. 1913 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி வெளியாகிய ஞாயிற்று பத்திரிகையான 'நியூயோர்க் வேர்ல்ட்' என்ற பத்திரிகையின் இணைப்பிதழிலேயே இந்த முதாவது குறுக்கெழுத்துப் போட்டி பிரசுரமாகியிருந்தது. காலப்போக்கில் குறுக்கெழுத்துப் போட்டியானது, இந்த பத்திரிகையின் இன்றியமையாத அம்சமாகவும் அமைந்துவிட்டது.

1924 ஆம் ஆண்டில்தான் குறுக்கெழுத்துப் போட்டி அடங்கிய புத்தகம் முதன்முதலாக வெளியாகியது. ஆரம்பகாலங்களில் குறுக்கெழுத்துப் போட்டிகள் அதிகம் பிரபல்யம் அடையாதிருந்தபோதிலும், அது அறிவைப் பெருக்குவதிலும், ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக்குவதிலும் சுவாரஸ்யமானதாக இருந்தமையினால் நாளடைவில் படிப்படியாக உலகம் பூராகவும் பரவியது. இன்று பத்திரிகைகளுக்கு இன்றியமையாத ஓர் அம்சமாக குறுக்கெழுத்துப் போட்டி உள்ளமை குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 31, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org